பொது நூலகம்

விலை ரூபா 2-00

12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 யாழ்ப்பாணம் | சித்திரை 7 ஷஃபா 10 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 68 (20—4—86)

★ ஊதியமில்லை ★ ஒழுங்கு நடவடிக்கை

# ஊர்காவல்படை செயலிழக்கிறது!

(நமது நிருபர்)

கிழக்குப் பகுதியிலும், வன்னி மற்றும் ஏனைய தென் பகுதிப் பிரதேசங்களிலுமுள்ள ஊர்காவல்படை அமைப்புக்கள் செயலிழந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது இப்பகுதிகளின் ஊர்காவல் படையினர் அச்சத்தின் காரணமாகவும், போதியளவு ஊதியமின்மையாலும், கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள் காரணமாகவும் தமது கடமைகளைப் புறக்கணித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருமலையுட்பட மட்டக்களப்பின் முக்கிய பகுதிகளிலும், வன்னிப் பிரதேசத்திலும் கடந்த ஒருமாதகாலமாக ஊர்காவல் படை அமைப்புக்கள் செயழிழந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்து விழிப்பாக இருக்கும் வகையில் ஊர்காவல் படையினருக்கு விசேட பயிற்சியும் 'ஷொட்கன்' துப்பாக்கிகளும் வழங்கப்பட்டிருந்தன. கூடவே கடமையிலீடுபடும் பட்சத்தில் நாளொன்றுக்கு 40 ரூபா என்ற அடிப்படையில்விசேட படியும் வழங்கப்பட்டது.

ஆனால் தீவிரவாதிகளின் தொடர்ச்சியான கடுந் தாக்குதல்களினாலும், நவீன ஆயுத பிரயோகங்களாலும் இவர்கள் அச்சமடைந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது அத்துடன் இவர்களுக்கான விசேட படிகளும் கடந்த சில காலமாக ஒழுங்காக வழங்கப்படாததால் தமது பணிகளை இவர்கள்புறக்கணித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

[12ம் பக்கம் பார்க்க]

## இராணுவ 'அன்னதானம்' இளைஞர் தலையீட்டால் குழப்பம்!

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அன்னதான வைபவமொன்றை மேற்கொள்ள எடுத்த முயற்சி இளைஞர்களின் தலையீட்டினால் குழப்பப்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றது. முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு முன்பாகவுள்ள பிள்ளையார் கோயிலிலேயே அன்னதானம் வழங்கி நேற்றுமுன் தினத்தைச் சமாதான தினமாக அனுஷ்டிக்க இராணுவத்தினர் ஏற்பாடுகள் செய்திருந்தனராம்.

அக்கோயிலுக்கு அருகாமையிலுள்ளவர்களையும், அரசாங்க ஊழியர்களையும் இந்த அன்னதான வைபவத்துக்கு இராணுவம் அழைத்திருத்தது. ஆனால் இதனையறிந்த சில இளைஞர்கள், இவ் அன்னதான நிகழ்ச்சியை தடுக்கும் முயற்சியில் இறங்கியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நகரெங்கும் ஹர்த்தால் ஏற்பாடாகியிருந்தது இதனால் எவரும் இந்த அன்னதானத்தில் கலந்துகொள்ள முடியவில்லை.

இதனையடுத்து இராணுவத்தினர் தமது முகாமிற்கு வடக்குப்பக்கத்திலுள்ள சராச்சிக்குடியிருப்புப் பகுதியில் வசித்த முதியோரை அழைத்து அன்னதானம் வழங்கி அவர்களுக்கு சிறுதொகைப்பணமும் வழங்கியதாக அறியப்படுகிறது.

## யாழ். இந்துவில் இலங்கை வங்கியாளர் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

இலங்கை வங்கியாளர் நடாத்தும் இடைநிலைப் பரீட்சையும், இறுதிப் பரீட்சையும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

வங்கி ஊழியர்களுக்காக நடாத்தப்படும் இப்பரீட்சை நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து இன்று20 ம் திகதியும் அடுத்து 26 ம் திகதியும் இது நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையை யாழ். கன்னியர் மடம் ஆங்கிலமகாவித்தியாலயத்தில் நடாத்ததிட்டமிடப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்புக்காரணங்களைமுன்னிட்டு பரீட்சை நிலையம்யாழ். இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டதாக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

[மா]

## பலிராம் பஹத் தலைமையில் அணிசேராக் குழு லிபியா பயணம்!

(புதுடில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பலிராம் பஹத் தலைமையிலான அணிசேரா நாடுகளின்பிரதிநிதிக்குழுவொன்று லிபியா பயணமாகிறது.

அணிசேரா நாடுகளின் ஆதரவை லிபியாவுக்குத் தெரிவிக்கும் வகையில் செல்லும் இக்குழுவினர், லிபியாவில் ஒருநாள் [illegible] தங்கிவிட்டு பின்னர் நியூயோர்க் செல்வார்கள்.

## 45 பெண்களை தலையிலடித்துக் கொன்ற 'பூசாரி' கைது!

(புதுடில்லி)

கடவுளடிக்கிக் கொண்டு செல்கிறேன் எனப் பேசி மயக்கி 45 பெண்களைப் பொல்லால்தலையிலடித்து கொலை செய்த சங்கப்பா என்ற பெங்களூர் வாசி புதுடில்லியில் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

தாம் செய்த கொலைக் குற்றங்களனைத்தையும் ஒப்புக் கொண்ட இந்தக் 'கொலைகாரப் பூசாரி 21 தடவைகளில் குற்றவாளியாகக் காணப்பட்டு ஏற்கனவே 10 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவராம்!

## நால்வர் சுட்டுக்கொலை!

(மூதூர்)

மூன்று பெண்களும் ஒரு ஆணும் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன் தினம் இரவு மூதூர், கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது

கொலை செய்யப்பட்ட நால்வரின் சடலங்களும் சேனையூரிலுள்ள அகதிகள் முகாமுக்கு முன்னிலையில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்ததை நேற்றுக் காணக்கூடியதாய் இருந்தது

[12-ம பக்கம் பார்க்க]

## 'முஸ்லிம்களுக்கு பதினெட்டு தனித்தொகுதிகளை ஒதுக்குக!'

### ஜனாதிபதிக்கு முஸ்லிம் கவுன்சில் மகஜர்

(கொழும்பு)

இலங்கையின் பாராளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை 225 ஆக அதிகரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ள நிலையில், பிரதிநிதித்துவ அடிப்படையில் இலங்கை முஸ்லிம்களுக்கென பதினெட்டு [18] ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென இலங்கை முஸ்லிம் கவுன்சில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவிடம் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளது

முஸ்லிம்மக்களின் ஜனவிகிதம் சிங்களவர்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் மூன்றில் ஒரு பங்காக இருப்பதையும், இலங்கை முழுவதிலும் 8 சதவீதமாக இருப்பதைச் சுட்டிக்காட்டிய மேற்படி மகஜர் பின்வரும் ரீதியில் முஸ்லீம்களுக்கான நாடாளுமன்ற ஆசன ஒதுக்கீடுகள் செய்யப்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

அம்பாறை-3 கொழும்பு-2 மட்டக்களப்பு திருகோணமலை கழுத்துதுறை, கண்டி, மாத்தளை, காலி, கேகாலை அநுரசபுரம், வன்னி, பதுளை, குருணகல், புத்தளம் ஆகியவற்றில் தலா ஒன்று.

## சீருடைகள் கொள்ளை!

மட்டக்களப்பு)

சலவைத்தொழிலாளி ஒருவரின் வீட்டிலிருந்து 40 பொலிஸ் சீருடைகள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது

மட்டக்களப்பு அரசடிச் சந்திக்கருகாமையில் இச் சலவைத் தொழிலாளியின் வீடு உள்ளது

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத இருநபர்கள் திடீரென அவ்வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு 40 பொலிஸ் சீருடைகளையும் பொதியாகக் கட்டிக் கொண்டு தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[மா]

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்விபரம்

(யாழ்ப்பாணம்]

இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த 6 வருடங்கள் வெளிமாவட்டசேவையைப் பூர்த்திசெய்த 321 ஆசிரியர்களுக்கு கல்விச் சேவை ஆணைக்குழு மே மாதம் 1ந் திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்கச் சிபார்சு செய்துள்ளது.

பத்திரிகைப் பிரசுரத்துக்கெனக் கல்விச் சேவை ஆணைக்குழு அனுப்பிவைத்த இடமாற்றம் பெறுவோர் பட்டியல் வருமாறு:

திரு. க கணேசு நாவலப்பிட்டி, செல்வி. ஜே எஸ். ஸ்தியாம்பிள்ளை நாவலப்பிட்டி, செல்வி ஆர் செல்லப்பா கண்டி, திரு வி தியாகராசா கண்டி, செல்வி.பி. சிவஞானவல்லி மடுல்கல, திருமதி வி சுப்பிரமணியம் பம்பலபிட்டி, செல்வி. ஐ. தாமோதிரம்பிள்ளை நுசேகொட, திருமதி எம். பாலதேவன்

(12 ம் பக்கம் பார்க்க)

## தொழிற்சங்க, வெகுஜன அமைப்புகளின் மேதினம்!

### சுன்னாகத்தில் ஊர்வலத்துடன் கூட்டம்!!

[யாழ்ப்பாணம்]

தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புக்களின் ஐக்கிய மேதின ஊர்வலம் இணுவில் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஆரம்பமாகி சுன்னாகம் சந்தைக்கு சென்று அங்கு மேதினக் கூட்டம் நடைபெறும்.

லங்கா தொழிற்சங்க சம்மேளன வடபிராந்திய காரியாலயத்தில் நேற்று பிற்பகல் திரு எஸ் விஜயானந்தன் தலைமையில் நடந்த மேதின ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

மேதினப் பிரகடனத்தின் நூற்றாண்டு விழாவாகவும், இலங்கையில் மே தினம் விடுமுறையாக்கப்பட்ட 30 வது ஆண்டு விழாவாகவும் இத்

[11-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 58, சங்கிலியன் வீதி, நல்லூர். [C-1835]

வல்வெட்டித்துறை, ஆலடி ஒழுங்கையில் நிலப்பரப்பு 6 கொண்டதும் வீதியும் ஒழுங்கையும் கொண்டதுமான கருவத்தலை கலட்டி பூசீத்தான்) ஆதனம் விற்பனைக்குண்டு. சு. பெ. மு. கனகசபாபதி, வியாபாரி மூலை, பருத்தித்துறை. [C-1836]

நல்ல நிலையில் உள்ள போட்டோ ஸ்ரட் மெசின் (Canon N. P. 50) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ''புஸ்ப வில்லா'', ஐயனுர் வீதி, பருத்தித்துறை. [C 1811]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

நல்ல இன செவ்விளநீர் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 1858]

சாவகச்சேரி அல்லாரையில் 10 பரப்பு தென்னந்தோட்டக் காணி. குடியிருப்பதற்கும் தோட்டம்செய்வதற்கும் பாதுகாப்பான, மேட்டுநிலக்காணி பரப்பு 2000/-. 9 துண்டுகளாக விற்பனைக்குண்டு சாவகச்சேரியிலிருந்து 2. K. M. தொடர்பு 119, பெரியகடை, யாழ்ப்பாணம். [C 1851]

சாவகச்சேரி, சங்கத்தானை, இந்துக் கல்லூரிக்கும் புகையிரதத்தரிப்புக்கும், உபதபால் கந்தோருக்கும் மத்தியில்உள்ள 2 பரப்பு 6 குளி காணி விற்பனைக்குண்டு. சாரதா வீதி ஒரு பக்கமும், புகையிரதவீதி, கண்டி ரோட் மறுபக்கமுமுள்ள மூலையில் இரண்டாவதாகவுள்ளது. தொடர்பு: (1) வ. தாமோதரம்பிள்ளை, சங்கத்தானை, சாவகச்சேரி. அல்லது (2) தா. சிவானந்தன், 460, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [C-1827]

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள் அல்மாரி, கட்டில்கள், மெத்தைகள், Dressing Table, குளிர்சாதனப் பெட்டி, Iron, Electric Cooker, Kenwood Chef, கிளாஸ் வகைகள், கசற் றேடியோ, மற்றும் பல. பத்மநாதன், ஆடியபாதம் றோட், (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்). [C-1834]

## விற்பனைக்கு

Shetna Farm, Nel Farm, Dickhena Farm சேவற் குஞ்சுகள் 22ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 1859]

## தேவை

றேடியோ - ரெலிவிசன் திருத்துவதில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு C-1855 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-1855]

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலுமோ/தனியவோ தட்டச்சு, சுருக்கெழுத்து கற்பிக்கக் கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். மாநகரசபை எல்லைக்குள் உள்ளோர் விரும்பத்தக்கது. செந்துரன் ரேடிங் கொம்பனி, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். [C 1857]

நடுத்தரவயதுள்ள சமையல் காரப் பெண் உடனே தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். ஹரி ஹரன் என்டப்பிரைஸ், 337 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C- 1863)

ஆங்கிலம், தூயகணிதம், விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். ஹரிஹரன் என்டப்பிரைஸ், 337 பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி. யாழ்ப்பாணம். (C- 1862)

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (Refrigerator), உறையவைக்கும் குளிர்சாதனப் பெட்டி (Deep-Freezer) தேவை. இனம், விலை விபரங்களுடன் விண்ணப்பிக்க; மனேஜர், சற்குணராஜா அன் பிறதர்ஸ். 660 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C- 1861)

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986 Modern Education Centre, Karaveddy. [C 1845]

## அடுத்தடுத்து கொள்ளை

[பச்சிலைப்பள்ளி]

முள்ளியான் பகுதியில் உள்ள தென்னந்தோட்டமொன்றில் ஒரு மாதத்திற்கிடையில் மூன்ருவது தடவை பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இரவு நேரத்தில் பயங்கர ஆயுதங்களுடன் வந்தவர்கள் தோட்டத்திலிருந்தவர்களைப் பயமுறுத்தி விட்டு, உழவு இயந்திர உதிரிப்பாகங்கள், தோட்ட வேலை உபகரணங்

(9ம் பக்கம் பார்க்க)

## WANTED

Applications are invited from both sexes for the post of Sworn Translator to work for a reputed firm in Jaffna Town. Apply on or before 30th April, 1986 Apply to Advertisement No: C 1828, C/o Eelanadu Ltd., Jaffna (C 1828)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வன் சிறீராம்

Dr. S. குணம் - கமலாதேவி அவர்களின் ஏக புதல்வன் செல்வன் சிறீராம் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (20-4-86) குதூகலமாகக் கொண்டாடுகிறுர் அவரை துர்க்காதேவி அருள்பெற்று வாழ அப்பா குடும்பத்தினர் அம்மா குடும்பத்தினர் வாழ்த்துகின்றனர்.

இலக்கம் 1,
2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். C 1831

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்லி க. தர்மினி (துளசி)

வட்டு கிழக்கைச் சேர்ந்த கவீந்திரன்- திவனேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வி தர்மினி (துளசி) இன்று(20-04-86) தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறுர். தர்மினியை அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மப்பா, அப்பம்மா, அம்மம்மா, ஜேர்மன் சித்தப்பா, ஜேர்மன் மாமா, சவுதி சித்தப்பா, சவுதி மாமா, மாமாமார், மாமிமார். பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரிமார், சித்தப்பாமார், அண்ணுமார், அக்காமார், மச்சாள்மார், அத்தான்மார், மற்றும் உற்ருர், உறவினர்கள் கற்பகப்பிள்ளையார் அருளால் பல்கலையும் பயின்று, பார்புகழ நீடுழிவாழ்க என அன்புடன் வாழ்த்துகின்ருர்கள்.

C 1822

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### இராமநாதன் மண்டபத்தில் ஒரு பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இராமநாதன் மண்டபத்தில் ஒரு பகுதியில் திருத்த வேலையை மேற்கொள்ளுவதற்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தகாரர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அல்லது கட்டடத்திணைக்களத்தில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவுசெய்தவர்களாக இருத்தல் வேண்டும் விண்ணப்பப்படிவங்கள் வரைபடங்கள் போன்றவற்றை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து 25-04-86-ம் திகதிவரை பெற்றுக்கொள்ளமுடியும். விபரங்களுக்கான வேண்டுகோளுடன் ரூபா 100/-க்கு காசுக்கட்டளை அனுப்பப்பட வேண்டும். கேள்விகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி 30-04-86 முற்பகல் 10.00 மணி ஆகும். விண்ணப்ப கடித உறையின் மேல் மூலையில் UJ/YA/PL/02/112 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்.

[A 598]

## நன்றி நவிலல்

எங்கள் குடும்பங்களின் ஒளியாக விளங்கி, இன்று இறைஒளியுடன் கலந்துவிட்ட திருமதி பிலோமினு அலெக்சாந்தர் அவர்களது ஈடு செய்ய முடியாத இழப்பின்போது எமக்கெல்லாம் ஆறுதலும் அன்பும் காட்டி பலவகைகளிலும் உதவிகள் நல்கிய இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர் குழாம், மாணவர், பழைய மாணவர் ஏனைய அருட் தந்தையர்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், போயிட்டிவாழ் மக்கள், மற்றும் அஞ்சலி உரைகள், பிரசுரங்கள், மலர் வளையங்கள், மலர் மாலைகள், இறுதி ஊர்வல வீதி ஒழுங்குகள் ஆதியன மூலம் எம்துயரில் பங்குகொண்ட உற்ருர், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் பணிவான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்ருேம்.

மாமியார்:
திருமதி செல்லம்மா செபஸ்ரியாம்பிள்ளை.
சகோதரிகள்:
அன்னபாக்கியம் சவரிமுத்து, தவமணி ஜீவம், நவமணி கீதபொன்சலன்.
மைத்துனிகள்:
இராணி நட்சேத்திரம், மலர் செபஸ்ரியாம்பிள்ளை, மணி மத்தியூஸ்.
[C-1840]

## தமிழர் ஒற்றுமைக் குரல்

தமிழர்கள்
எல்லோரும்
ஒன்றுபட்டுவிட்டோம்
ஒன்றுபட்டு விட்டோம்!
ஆம்!
வானத்தை அண்ணுந்து
பார்ப்பதில்
இன்று
தமிழர்கள் எல்லோரும்
ஒன்றுபட்டுவிட்டோம்!

— கணேஷ்

## சூட்டில் பலியானுர்

[வேலணை]

கடந்த 17 ம் திகதி வியாழக்கிழமை யாழ் நகரில் இருந்து தீவுப்பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த மினி பஸ் மீது கோட்டை இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அதில் பிரயாணம் செய்த ஒருவர் மரணமானுர்.

கிளிநொச்சியை சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

இந்த இளைஞரை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அவர் மரணமானுர். மேற்படி இளைஞர் மண்டைதீவில் இருக்கும் தனது உறவினர் வீட்டிற்கு வந்தபோதே இப் பரிதாப சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது.

## உரும்பராயில் வீட்டை முற்றுகையிட்டு பல லட்சம் ரூபாய் கொள்ளை

[சுன்னுகம்]

ஆயுதம் ஏந்திய பதினைந்து இளைஞர்கள், உரும்பராயிலுள்ள வீடொன்றை முற்றுகையிட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகை, ரொக்கப்பணம், வீட்டுபாவனைப் பொருட்களைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் உரும்பராயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை [கடுகுச் செல்லத்துரை] என்பவரது இல்லத்தில் இடம்பெற்றுள்ளது

இக்கொள்ளையை நடத்தியவர்கள், வீட்டிலுள்ளவர்களை அறையொன்றில் காவலில் வைத்துவிட்டு சகல அலுமாரிகளையும் உடைத்து, பணம், நகை, பாவனைப்பொருள்களை கொள்ளையடித்துள்ளனர். இக்கொள்ளையை நடாத்தியவர்கள், டோச்லைட், அயன் பொக்ஸ், டின்களிலுள்ள சில்லறை நாணயங்களைக்கூட விட்டுவைக்கவில்லையாம். இதைவிட பெரிய பொருள்களை ஏற்றிச்செல்ல வாகனம் கொண்டுவருவதாகக் கூறிச் சென்றுள்ளனராம். [கெ]

## A/L 86 திங்கள் முதல்

### புதிய பகுதிகள்

7-30: தடை ஊடகங்களில் இயக்கம், வலு
8-45: சிக்கல் எண்
10-30: சடத்துவதிருப்பு திறன்
11-45: திரிகோண கணிதம்

சனி, ஞாயிறு தவிர்ந்த நாட்கள்

ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

C 1848

## உங்கள் உற்பத்திப் பொருள்களை இருபத்தி நான்கு மணிநேரத்தில் விநியோகிக்க வேண்டுமா?

எமது நிறுவனத்தின் விநியோகப் பிரிவில் கடமையாற்றும் சுமார் 60 பெண்கள் தினசரி ஒவ்வொரு வாடிக்கையாளர்கள் இல்லம் சென்று உற்பத்திப் பொருள்களைவிநியோகம் செய்துவருகின்ருர்கள். இன்று பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை எங்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விநியோகம் செய்து நன்மை அடைந்துள்ளார்கள். நீங்களும் உங்கள் பொருள்களை விநியோகம் செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்:

**றொப்பலர் இன்ரநஷனல்,**
இல. 95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

A 451

## தொடரும் விண்வெளி விபத்துகள்:

# அமெரிக்க ரொக்கட் வானில் வெடித்துச்சிதறியது!

**அமெரிக்க டைட்டன் ரொக்கட் நேற்று முன்தினம் புறப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்துச் சிதறியது. இதனையடுத்து அப்பகுதியிலுள்ள உல்லாசப் பிரயாணிகளும், சிறுவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.**

டைட்டன்-34D எனப்படும் இந்தப் பாரிய மனிதரில்லா ரொக்கட் கலிபோர்னியா நகரிலுள்ள விமானப்படை விமானத்தளமொன்றில் இருந்து புறப்பட்டு சிறிதுநேரத்தில் வெடித்துச் சிதறியது.

இந்த ரொக்கட் அமெரிக்க ராணுவத்தின் KH-11 என்ற நவீன வேவுபார்க்கும் செய்மதியொன்றை விண்ணில் நிறுத்துவதற்காகத் தன்னுடன் கொண்டுசென்றது இவ்விபத்தில்செய்மதியுப சிதறிவிட்டது.

இந்த விபத்திஞல் மரணங்களோ அல்லது யாருக்கும் காயங்களோ ஏற்படவில்லையாஞலும், இந்த ரொக்கட்டிலிருந்த சிலநச்சுவாயுக்கள், விபத்தைத் தொடர்ந்து வெளியேறலாம் என்ற அச்சத்திஞல் இப்பகுதியில் வாழும் குழந்தைகள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மக்கள் தமது இருப்பிடங்களினுள்ளேயே இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்திஞல் பாதிக்கப்படுவது அமெரிக்கப் பாதுகாப்புப் புலஞய்வுத்துறையேயெனக் கருதப்படுகிறது. கடந்த ஜனவரியில் ஏற்பட்ட சாலஞ்சர் விபத்தைத்தொடர்ந்து, அமெரிக்கப் பாதுகாப்புத் துறை தனது ராணுவச் செய்மதிகளை விண்வெளிக்கு அனுப்ப இதுபோன்ற ரொக்கட்டுகளையே நம்பியிருந்தது. அத்துடன் கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் இதுபோன்ற வேவு செய்மதியொன்றைக் கொண்டுசென்ற இன்ஞெரு டைட்டன் ரொக்கட்டும்வெடித்தது குறிப்பிடத்தக்கது

இப்போது சோவியத்தின் படை நடமாட்டம், மற்றும் ராணுவநடவடிக்கைகளை வேவு பார்க்க அமெரிக்கா வசம் ஒரே ஒரு ரொக்கட்டே உள்ளது எனத்தெரியவருகிறது (செ)

# "பாகிஸ்தானில் சீக்கிய தீவிரவாதிகள் புகலிடம்!"

## — செல்வி பூட்டோ

கராச்சி, ஏப். 16

பாகிஸ்தானின் ராணுவ ஆட்சி, இந்திய சீக்கியத் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளித்துள்ளது என்று பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவியும், முன்னுள் பிரதமர் பூட்டோவின் மகளுமான செல்வி பெனுஸிர் பூட்டோ குற்றம்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானின்ராவல்பிண்டி மாகாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் செல்வி பெனுஸிர் பூட்டோலண்டனிலிருந்து பாகிஸ்தான் திரும்பியபின் நடத்திய ஐந்தாவதுமாபெரும் பொதுக்கூட்டம் இதுவாகும்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "துப்பாக்கிகளால் மக்களைப் பயமுறுத்தமுடியாது. ஜெனரல் ஸியாவிஞல் தனது ராணுவத்தின் தலைமைப் பதவிக்கு விசுவாசமான ஒருவரைத் தேர்ந்தெடுக்கமுடியவில்லை. அதஞல் தான ராணுவத்தின்தலைமைப் பதவியை தானே வகித்து வருகிருர்" எனக் கூறினர்.

மார்க்கோஸ்—

## பணம்கொடுத்து புகலிடம் பெற முயற்சி!

(லண்டன்)

முன்ஞள் பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திரு. மார்க்கோஸின் 'அரசியல் புகலிடம் தந்தால், பணம் தருவேன்' என்ற கோரிக்கையை கரிபியத் தீவான சென்ட். வின்சன்ட்டும் நிராகரித்துள்ளது.

திரு. மார்க்கோஸ், சென்ட் வின்சன்ட் தீவு தனக்கு அரசியல் புகலிடம் அளித்தால் 6 கோடி 50 லட்சம் டாலர் பணம் தருவதாக அந்நாட்டரசுக்குக் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய இத்தீவின் பிரதமர் திரு. ஜேம்ஸ் மிக்கேல், தமது நாட்டிலுள்ள சர்வதேச விமன நிலையமொன்றின் தரத்தை உயர்த்த இப்பணம் உதவுமென்ருலும், மார்க்கோஸுக்கு அரசியல் புகலிடம் அளித்தால் உள்நாட்டு நெருக்கடி ஏற்படுமென்றும், அதஞல் அவருக்குத்தாம் புகலிடம் அளிக்க விரும்பவில்லையெனவும் கூறினர்.

(செ)

## இந்திரா கொலையாளி மனைவி கைது

(சண்டிகார்)

முன்ஞள் இந்தியப் பிரதமரைச் சுட்டுக் கொன்றவர்களில் ஒருவரான டீன்ட் சிங்கின் மனைவி திருமதி பிமல் கல்சாவை பஞ்சாப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். திருமதி கல்சா அகில இந்திய சீக்கியர் மாணவர் சம்மேளனத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றவிருக்கையிலேயே கைது செய்யப்பட்டார்.

முன்னர் ஒரு தாதியாக விருந்த திருமதி கல்சா, 1984ம் ஆண்டில் திருமதி இந்திரா காந்தியின் படுகொலையின் பின்னர் தமது பதவியை ராஜிஞமாச் செய்துவிட்டு தீவிரவாதிகளுடன் இணைந்தார்

[செ]

## ஹெக்டேக்கு பய முறுத்தல்

(பெங்களூர்)

கர்நாடக முதலமைச்சர் திரு ராமகிருஷ்ண ஹெக்டேக்கு கடந்த வியாழக்கிழமை இரவு தொலைபேசி மூலம் பல கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரது இல்லத்துக்கும், அவர் தற்போது வைத்திய சிகிச்சை பெற்று வரும் வைத்தியசாலைக்கும் மேலதிக பந்தோபஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த திரு ஹெக்டே கர்நாடக உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றினைத் தொடர்ந்து கடந்த மாதம் தமது பதவியை விட்டு விலகினுராயினும், பின்னர் கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் முதலமைச்சராக பதவியேற்ருர். (செ)

கம்பியூச்சியாவிலுள்ள

## வியட்நாம் துருப்புகளின் ஒருபகுதி வாபஸாகும்

(லண்டன்)

கம்பியூச்சியாவிலுள்ள தமது படைகளில் ஒரு பகுதியை இவ்வருட முடிவுக்குள் விலக்கிக் கொள்ளப் போவதாக வியட்நாம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை தற்போது புதுடில்லி வந்துள்ள வியட்நாமிய உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 1990 ஆம் ஆண்டிற்குள் கம்பியூச்சியாவில் நிலை கொண்டுள்ள வியட்நாமியப் படைகளை விலக்கிக் கொள்ளும் வியட்நாம் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியே இவ்வருட படை வாபஸ் திட்டம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ)

## உலகச் செய்திகள்

## இலங்கைப் பிரச்னை இந்திய மார். கட்சி கவலை

[சென்னை]

இலங்கையின் இனப் பிரச்னைக்கு இலங்கை அரசு அரசியல் ரீதியிலன்றி ராணுவ ரீதியிலேயே தீர்வுகாண முயல்வது குறித்து இந்திய மார்க்ஸிஸக் கம்யூனிஸக் கட்சியின் தமிழ்நாடு பிரிவு கவலை தெரிவித்துள்ளது.

இம்மாதம் 13 ம் திகதி திருப்பூரில் நடந்த இக்கட்சியின் மாநாட்டிலேயே இக்கவலைத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் இலங்கையில் நடைபெறும் தமிழ் இனப் படுகொலையை உலகுக்கெடுத்துக் காட்ட வேண்டுமெனவும், இப் பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## ஜே. ஆர். அழைத்துத்தான் 'சோ' இங்கு வந்தார்!

(சென்னை)

சென்னையில் வெளிவரும் 'ராணி' சஞ்சிகை தனது 13-04-86 இதழில் பத்திரிகையாளரும் துக்ளக்' ஆசிரியருமான 'சோ'வின் இலங்கை விஜயம்பற்றி பின்வருமாறு எழுதியுள்ளது.

நாள்தோறும் தமிழ் மக்களை வேட்டையாடிக்கொண்டிருக்கும் இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கும் செல்லப்பிள்ளையாகிவிட்டார் 'சோ'.

ஈழத் தமிழரின் விடுதலைப் போரை எதிர்க்கும்ஒரே தமிழ்ப் பத்திரிகையாளர் சோதான் என்பது தெரிந்து அவருக்கு ஜெயவர்த்தன அழைப்புவிடுத்தார்.

கொழும்புவந்துபோக 'சோக வுக்கு ஜெயவர்த்தன ஓசியா, விமான டிக்கெட்டு கொடுத்தார்

கொழும்பில் சோ தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றிலும் ஜெயவர்த்தன ஏற்பாடு செய்தார்.

ஓட்டலில் இருந்து தனது மாளிகைக்குசோவை அழைத்து வர படகுக் கார் ஒன்றையும் ஜெயவர்த்தன அனுப்பிவைத்தார்.

அவரைப் பேட்டிகண்ட சோ, அவர் கோபப்பட்டு விடாதபடி நயமான கேள்விகளை மட்டுமே கேட்டார். பேட்டி முடிந்தபின்பு, 'ஜெயவர்த்தன மிகவும் நல்லவர்' என்று சோ உலகுக்கு அறிவித்தார். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும் அல்லவா?

இந்தியப் பத்திரிகையாளர்கள் ஒரு பாட்டில் விஸ்கிக்கு சோரம் போய்விடுவார்கள் என்று சொல்லுவது உண்டு. ஜெயவர்த்தனவை சந்தித்த பொழுதே சோ அதை உண்மையாக்கிவிட்டார் என்ருலும் எம். பி. பதவிக்காக அதை உறுதிப்படுத்தியும்விட்டார்.

## பிச்சை எடுக்கும் பட்டதாரிகள்

[பெங்களூர்]

பெங்களூர் ரெயில் நிலையத்தில் 4 வாலிபர்கள் கிழிந்த துணிகளுடன் பிச்சை எடுத்துக் கொண்டு திரிந்தனர். பொலிஸார் அவர்களை கைது செய்து பிச்சைக்காரர் விடுதிக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களிடம் விசாரித்தபோது 4 பிச்சைக்காரர்களும் பட்டதாரிகள் என்பது தெரியவந்தது இவர்களில் 2 பேர் பட்ட மேல் படிப்பு படித்தவர்கள்.

பிடிபட்ட வாலிபர்களில் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். பொலிஸார் அவர்களுக்கு பஸ் கட்டணம் கொடுத்து சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

## உங்கள் தேவையே எங்கள் சேவை
## உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள்

ரொப்பலர் நிறுவனத்தின் விற்பனைப்பிரிவு விநியோகப் பெண்கள் உங்கள் வீட்டுப்பாவனைப் பொருள்களான உணவு, மருந்துவகைகள், அழகுசாதனப் பொருள்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் முதலியவைகளை உங்கள் வீட்டுப்படிகளிலேயே நகரத்திலும் பார்க்க குறைந்த விலையில் விநியோகம் செய்கிருர்கள்.

மலர்ந்த முகத்துடன் உங்கள் வீட்டுக்குவரும் எமது பிரதிநிதிகளை வரவேற்று உற்சாகப்படுத்துங்கள். அவர்களிடம் பொருள்களை வாங்குவதால் போக்குவரத்துச் செலவுகள், இராணுவ கெடுபிடுகள், உடல்சலிப்பு முதலியவற்றிற்கு ஆளாகாமல் வீட்டில் உள்ளபடியே மிகுதிப்படுத்த முடியும். உங்கள் தேவைகளை எமது பிரதிநிதிகளிடம் அறியத் தாருங்கள். நாம் சிறந்த முறையில் அவற்றை விநியோகம் செய்ய முடியும்.

வாடிக்கையாளர்களே எமது நிறுவனத்தின் அதிபர்.

### ரொப்பலர் இன்ரநஷனல்

A 450 இல. 95, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## லிபியாமீதான அமெரிக்க குண்டுவீச்சு

# அமெரிக்கத் தலைவர்களின் கௌரவத்தை அவமதிக்கும் ரீகனின் விஷமச்செயல்!

ஏகாதிபத்திய அடக்குமுறையாளர்களின் இறுதி ஆறுதம் 'விமானக் குண்டு வீச்சுக்கள்' தானா? என்று ஏங்குமளவுக்கு லிபியா மீதான அமெரிக்க குண்டுவீச்சு நாகரிக உலகை வியப்பிலாழ்த்தியுள்ளது.

மேற்கு பெர்லின் கேளிக்கை விடுதியில் அமெரிக்க சிப்பாய் ஒருவர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதற்கு லிபியாவே மூலகாரணம் என்று கூறி இந்த அர்த்தராத்திரி குண்டுவீச்சைக் கண்மூடித்தனமாக அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

கொள்கையில் உறுதியும், பிராந்திய ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கையும், உரிமைகள் மறுக்கப்பட்டு தாயகங்களை இழந்த பாலஸ்தீனர்கள் போன்ற நாடற்றவர்களின் தோழனுமான லிபிய அதிபர் கேர்ணல்கடாபி மத்திய தரைப் பகுதியில் ஒரு காத்திரமான தலைவராக இருந்து வருகிறார்.

இத்தகைய ஓர் உறுதிமிக்க இளந்தலைவர் தமது அடாவடித்தனங்களுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதே, அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடான இஸ்ரேலுக்கும் கடாபிமீது கடும் விரோதத்தை உண்டுபண்ணியுள்ளது.

உலகில் அமெரிக்காவின் எந்தஒரு நிலைமீது தாக்குதல் நடத்தப்பட்டாலும் அதற்கு லிபியாவே பொறுப்பென்று உடன் கூறிக்கொள்வது இன்றைய அமெரிக்க அதிபரின் வழக்கமாகவுள்ளது.

அமெரிக்கா ஒரு முதலாளித்துவ நாடான போதிலும், அமெரிக்கத் தலைவர்கள்பலர் சோஷலிஸ நாடுகளினதும் மூன்றும்உலக நாடுகளினதும், தலைவர்கள் ராஜதந்திரிகள் பாராட்டுமளவிற்கு நடந்து கொண்டுள்ளனர்.

இவர்களில் ஜோன். எவ். கென்னடி. பிராங்ளின் ரூஸ்வெல்ட், டுவிட் ஐஸனேவர், லின்டன் ஜோன்சன் போன்றோர்குறிப்பிடத்தக்கவர்களாக இன்றும் உலகமக்கள் மத்தியில் நீங்காஇடம் பெற்றுள்ளனர்.

பிராங்ளின் ரூஸ்வெல்ட் இரண்டாம் உலக யுத்தத்தில் ரஷ்யத்தலைவர் ஸ்டாலினுடன் சேர்ந்து 'நாஸி' ஹிட்லருக்கு எதிராகப் போராடியதும், அப்போரில் ஒரு முக்கிய தளபதியாக இருந்த டுவிட் ஐஸனேவர் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியானதும் உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

இவர்களுக்கு மேலாக ஆபிரகாம்லிங்கன்எப்ஜோன்கெனடி போன்ற அமெரிக்க ஜனாதிபதிகள் அடிமை வியாபாரம், நிறவெறிக்கொள்கைகள்ஆகியவற்றுக் கெதிராக துணிந்துநின்று தமது உயிர்களைத் தியாகஞ் செய்தனர்.

மானிடவரலாற்றில் இந்த இரு தலைவர்களினதும் பெயர்கள் அதி உன்னத இடத்தைப் பெற்றுள்ளன. இந்த அமெரிக்கத் தலைவர்கள கம்யூனிஸத்தில் நம்பிக்கை அற்றிருந்தாலும் ஜனநாயகம்,மனித அடிப்படை உரிமைகள் ஏனைய நாடுகளின் இறைமை ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால் இவர்கள் வழியில் வந்த திரு. ரீகனின் போக்கு இத்தலைவர்களின் பெருமைகளுக்கும், கொள்கைகளுக்கும் களங்கம் கற்பிப்பதாக உள்ளது. ஏனைய அமெரிக்க ஜனாதிபதிகளைவிட உலக நாடுகளின் உள் விவகாரங்களில் தம்மிஷ்டப்படி தலையிடும் ஒருவராக ரீகன் விளங்குகின்றார்.

1983-ம் ஆண்டில் கிரெனடாவுக்குள் பிரவேசித்தமை, நிக்கரகுவா அரசுக்கெதிராக கிளர்ச்சிப் படைகளுக்கு உதவி வருவது, இஸ்ரேலின் நட்பு மூலம் அரபு நாடுகளைக் குழப்பிவிடுவது அங்கோலாவினுள் யுனிற்றா கிளர்ச்சியாளர்களை ஊக்குவிப்பது போன்ற அடாவடாவடித்தனங்களில் ரீகன் நிர்வாகம் நேரடியாகவே இறங்கியுள்ளது.

இவை தவிர பூகோளத்தின் அனைத்து சமுத்திரப்பகுதிகளிலும் பேராபாயத்தை உண்டுபண்ணும் வகையில் கடற்படைப்பலம் அமெரிக்காவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அமெரிக்க கடற்படைப்பிரிவுகளில் ஒன்றான மத்தியதரைக்கடலில் நிலைகொண்டுள்ள 6-வது கடற்படைப் பிரிவின் துணையுடனேயே கடந்த செவ்வாய்க்கிழமை லிபியாமீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த 6-வது கடற்படைப் பிரிவு ஒரு பூரண இராணுவ பலம்கொண்ட நாடொன்றுக்குச் சமனானதாகவும், மத்திய தரைக் கடலில் ஒரு தளம் போன்றும் நிலைகொண்டுள்ளது.

இக் கடற்படைப் பிரிவில் விமானத் தாங்கிக் கப்பல்கள், நாசகாரிகள் உட்பட 30 போர்க்கப்பல்களும், 170 விமானங்களும் 20 ஆயிரம் வீரர்களும் அங்கம் பெற்றுள்ளனர்.

அதி நவீன கம்பியூட்டர் முறையிலான போர் உபாயங்களை இப்பிரிவு கொண்டுள்ளது. எனவே இத்தகைய அசுர பலத்தின் துணையுடனேயே லிபியாமீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

★ பா அனந்தகிருஷ்ணன்

பிரிட்டனிலிருந்து சில அமெரிக்க போர் விமானங்கள் அத்திலாந்திக் சமுத்திரம் வழியாக மத்தியதரைக் கடலினுள் பிரவேசித்துள்ளன. பின்னர் இவை 6வது பிரிவின்விமானங்களுடன் சேர்ந்து சென்று லிபியாவில் குண்டு வீசியுள்ளன.

இக்குண்டு வீச்சைக் கண்டிக்கும் அதேவேளை, இது நடாத்தப்பட்ட விதத்தையும், லிபியாவின் எதிர்ப்புகள் முறியடிக்கப்பட்ட பாணியையும் கவனத்தில் கொள்ள வேண்டியது எதிர்காலப்பாதுகாப்புக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்.

சுமார் 30 போர் அமெரிக்க விமானங்கள் லிபியாவின் திரிப்பொலி நகரிலும், பெங்காஸி நகரிலும் அதிகாலை இரண்டு மணியளவில் கடந்த செவ்வாய்க்கிழமை குண்டுவீச்சு நடாத்தின.

'எவ்-111' ரகவிமானங்களே இக்குண்டு வீச்சுக்களில் ஈடுபட்டன. இவற்றில் இருவிமானிகளே அமர்ந்திருககு முடியும். இவை கேந்திர நிலையங்களை வரைபடங்கள் கொண்டு தமது கஞளுக் கண்களால் கச்சிதமாகக் குறிபார்த்துள்ளன.

இவற்றின் குண்டுவீச்சையடுத்து விழித்துக் கொண்ட லிபிய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வானவெளியில் மின்னொளியைப் பாச்சி வேட்டுக்களைத் தீர்த்தன. ஏவுகணைகளும் செலுத்தப்பட்டதாகத் தகவல்

ஆனால் அமெரிக்க விமானங்கள் கம்பியூட்டர் லேசர் கதிர்கள் மூலமாக (Computer Laser Beams) இந்த விமான எதிர்ப்பு வேட்டுக்களை முறியடித்தன. இதனால் அவ் வேட்டுக்கள் மீண்டும் நிலத்திலேயே வந்து வெடித்துச் சிதறி சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

எனவே லிபியா போன்ற சாதாரண நாடுகள் எண்ணிப் பார்க்க முடியாத அமெரிக்காவின் இந்த தாக்குதல் நடவடிக்கைகளை, எதிர் காலத்திலும் இது போன்று நடாத்தப்படும் தாக்குதல்களை எவ்வாறு சமாளிப்பது? என்ற கேள்வியைக் கிளப்பிவிட்டுள்ளது.

அமெரிக்கா அசுரக்கோலம் பூண்டுவருவதையே லிபியத் தாக்குதல் நிரூபிக்கிறது. இத்துடன் அது அடிக்கடி கூறிவரும் நட்சத்திரப் போரும் (STARWAR) பூகோளம் முழுவதையும் நடுங்க வைக்கிறது.

இந்நிலையில் லிபியாபோன்ற சுதந்திர தன்னுதிக்கம் கொண்ட நாடுகள் பாதுகாக்கப்படும் விதத்திலும், சர்வ தேசரீதியில் போராபத்தை நீக்கும் வகையிலும் அமெரிக்க அதிபர் ரீகனின். போக்கைகண்டிக்கும் உலகநாடுகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் இவை வெறும் வாய்ப்பேச்சுக்களாகவும், அறிக்கைகளாகவும் தமது கண்டனங்களை வெளியிடக்கூடாது செயல்வடிவில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இல்லையேல் நேற்று லிபியாவில் பொழிந்த குண்டுமாரி போன்று நாளை தனக்கு விரும்பிய எந்தஒருநாட்டிலும், அல்லது பிரதேசத்திலும் அமெரிக்கா குண்டுகளை வீசினால் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ★

---

★ பிரபல நடிகர் கமலஹாசன் 'ராணி' இதழில் இந்தக் கவிதையை எழுதியுள்ளார்.

## கமலஹாசனின் குயில் பாட்டு

நான்
புதுக்குயில் அல்ல!
நாடு அறிந்த
பழைய பாடகன்!

''ராணி'' அறியும்!
ராணிகள் அறிவார்கள்!
சென்ற
சித்திரையில் கூடக்
கூவியிருக்கிறேன்!
புத்தாண்டு மலரைப்
புரட்டிப் பாருங்கள்!

மீண்டும் ஒரு பாட்டு
வேண்டுமாம்
கேட்கிறார்கள்!
ஆனால்
என்ன பாடுவது?
பாடினாலும்

ஈழத்தில் எம்தமிழர்
ஓலமிட்டு அழுகிறார்!
சிங்களக் கொடியோன்
சிதைக்கிறான்
வதைக்கிறான்!
அய்யகோ எம்தமிழ்ப்
பெண்கள்
பூ இழக்கிறார்
பொட்டு இழக்கிறார்
மானம் இழக்கிறார்!
மழலை இழ கிறார்!
அவர் சிந்தும் கண்ணீர்
அலைகளை உப்பாக்குகிறது
செந்நீரோ
அடிவானைச் சிவக்க
வைக்கிறது!

கதறி அழும் அவர் குரல்
காய்ச்சிய ஈயமாக
நம்
காதுகளில் பாய்கிறது!
நான் என்ன பாடுவது?
பாடினாலும்
உங்கள் காதில் விழுமோ!

---

## உலகின் கலைச்செல்வத்துக்கு தமிழ் அளித்த ஏழு கொடைகள்

ஹோமரின் பாடல்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், றெம்பிறன்டின் (Rembrandt) சித்திரங்கள், பிரான்ஸின் ஆசனக் கோவில்கள், கிரேக்க சிற்பங்கள் உலகின் மிகச் சிறந்த கலைச்செல்வங்களாகப் போற்றிப் பேணப்படுகின்றன.

இவை எவற்றிற்கும் தமிழில் காணப்படும் அற்புத ஆக்கங்கள் சற்றேனும் சளைத்தவையல்ல என்பது செக்கோசிலோவாக்கியாவின் தலைநகரின் பிருக் (Prague) பல்கலைக்கழக திராவிடவியல்துறைத் தலைவரின் தெளிந்த கருத்தாகும். அவற்றுள் ஏழு வடிகட்டி வழங்கப்பட்டுள்ளன. அவற்றை உலகறியச் செய்வது தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் பெரும் பொறுப்பு.

(1) பண்டைய கிரேக்க இன்னிசைப் பாடல்களுடன் ஒப்பிடக்கூடிய எட்டுத் தொகை

(2) அன்பும் பொறையும் சாந்தமும் உலகில் வாழும் அனைவரையும் கவரல்ல பொது மறையாகிய திருக்குறள்.

(3) 'நெஞ்சை அள்ளும்' வீரகாவியம் சிலப்பதிகாரம்.

(4) சைவ நாயன்மார் நால்வரும் வைஷ்ணவ ஆழ்வாரும் பாடிய பக்தி இலக்கியம்.

(5) உலகின் மிகப்பெரிய படைப்புக்கள் எனக் கருதப்படும் சோழர்கால தென் இந்திய பித்தளைச் சிற்பங்கள்.

(6) தஞ்சை, சிதம்பரம், மதுரை போன்ற தலங்களில் காணப்படும் திராவிட கோயில் சிற்ப அற்புதங்கள்.

(7) மனிதத்துவத்தின் சிகரமெனக் கொள்ளப்படும் சைவசித்தாந்தம்.

---

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிசிவன்கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, அடுத்த மாதம் 7-ம் தேர்த் திருவிழாவும் 8ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் மண்டலாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மண்டலாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை கிரியைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். நண்பகல் சங்காபிஷேகமும் விசேட பூசையும் பிற்பகல் ஊஞ்சல், அம்பாள் வீதியுலாவும் நடைபெறும். விசேட மேளக் கச்சேரி, பஜனை முதலியனவும் இடம்பெறும்.

---

## புத்தாண்டே!

சொக்கும் நல்ல அழகினையும்
பக்கச் சுமையாம் வயதினையும்
துக்கக் குழியில் வீழ்த்திவிட்டு
தூங்குகிறாயோ புத்தாண்டே — ஓ
தூங்குகிறாயோ புத்தாண்டே


நட்ட நடு வீதிகளில்
துட்டர்களைக் கொட்டிவிட்டு
இட்டமுடன் எம்மவரை
இரக்கமின்றி அழிப்பதனை
ஏனோ இன்னும் காணவில்லை?

அறம் வளர்ந்த நெஞ்சங்கள்
ஆருயிர் தந்தையர் அருமைந்தர்
மனமுடை மனையும் மற்றோரும்
மாள்வதை நீயும் கண்டிலையோ
மாள்வதை நீயும் கண்டிலையோ.

— செல்வி விமலா வல்லிபுரம்

## எனது நினைவலைகளில்

# கே. டானியல்



சிறுகதைகளுக்கும் நாவல்களுக்கும் தலையங்கம் எழுதிய ஒரு ஆற்றல்மிக்க படைப்பாளி எனது கட்டுரைக்கே தலைப்பாகிவிட்டதனை நினைக்கும் போது நெஞ்சுதுடிக்கின்றது. கரையோரத்துப் பாறையாக உறைந்துவிட்ட எனது உள்ளம் ஓங்கியடிக்கும் நினைவலைகளினல் உருகுகின்றது.

நான் நினைக்கின்றேன் அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஏழு என்று. அப்பொழுது நான் மிகமுனைப்புடன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்த காலம். எங்கள்கட்சியில் அப்பொழுதுதான் துடிப்புமிக்க அம்மூன்று இளைஞர்களும் சேர்ந்து கொள்ளவந்தனர். அவர்கள்தான் கே. டானியல், டொமினிக்ஜீவா, சண்முகம் இராசையா ஆகியோர் ஆவர். இவர்களை எமது கட்சியுடன் இணைத்துக் கொள்வதில் என்னுடன் சேர்த்து அமரர்கள் மு. கார்த்திகேசன், ஆர். ஆர். பூபர்லசிங்கம் ஆகியோரும் உதவினர். இம்மூவரும் வீறுகொண்ட வேங்கைகள். தமது நாட்டை, மொழியை, பண்பாட்டை, கலாசாரத்தை நேசித்தவர்கள். அத்தவேளையில் உலகளாவிய மானிட நேயம் கொண்டு மற்றவர் திறமைக்கும் மதிப்பளித்தனர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தனர். சாதி ஒடுக்குமுறைகளுக்கும், நசுக்குதல்களுக்கும் எதிராக போர்க் கொடி ஏந்தினர். சாதி அநீதி ஒழியட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும் என்றும் இல்லாமை இல்லாமல் போகட்டும். எல்லோரும் எல்லாமே பெறல் வேண்டும் எனக்குரல் கொடுத்தனர். அப்படிக் குரல் கொடுத்த ஒலி ஒன்று இன்று ஓய்ந்து விட்டது அமைதி கொண்டு உறங்கிவிட்டது. ஆம் அதுதான் கே. டானியலின் குரல்.

அண்மையில் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் என்நெஞ்சிற்கினிய நண்பன் கே. டானியல் அமரரானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த கவலையைத் தந்தது. என்னைவிட வயதில் இளையவனும் இன்னமும்

**எம். ஸி. சுப்பிரமணியம்**

எத்தனையோ சமூகப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்ற வேண்டியவன் அமரனாகி விட்டானே என எண்ணும் போது நெஞ்சு குமுறுகின்றது.

சாதாரண குடும்பத்தில் ஓர் தொழிலாளியாக தன் வாழ்வினை ஆரம்பித்த கே. டானியல் பாமரர் முதல் பல்கலைக்கழகப் பண்டிதர்கள் வரை தனது எழுத்தால், பேச்சால், செயலால் கவர்ந்தான். இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் இவன் கதைகள், கட்டுரைகள் வெளிவந்தன. இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக் கொண்டான். கல்லூரியிலே பயிலாத போதிலும் தனது சொந்தமுயற்சியினாலும் தான் கொண்ட இலட்சியப் பற்றினாலும் மக்களை நன்கு புரிந்து கொண்டு மக்களிடம் தான் கற்றுக் கொண்டவற்றை மக்களுக்காகவே எழுதினான் பேசினான் செயல்பட்டான்.

கே. டானியல் என்னுடன் எமது கட்சியில் மட்டும் இணைந்ததோடு நில்லாது எமது சமூகத்தாபனமாக அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழ் மகாசபையுடன் அமரர் யோவேல்போல் தலைவராக இருந்த காலத்தில் இணைந்து அச்சமூகத்தாபனம் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டங்களில் எல்லாம் முன்னின்று கலந்து சொல்லடியும், கல்லடியும் கம்படியும் பட்ட போதிலும்.

'அடிமை விலங்கறுப்போம்
அதில்
ஆயுதங்கள் செய்திடுவோம்
கொடுமை மிகு மலிந்த- இக்
குவலயத்தை மாற்றிடு
வோம்'

என்று அஞ்சாது பணியாற்றினான். சம ஆசனம், சம போசனம் போராட்டத்திலும் சரி, தேநீர்க் கடைப் பிரவேசம், ஆலயப்பிரவேசம், போன்ற போராட்டங்களிலும் சரி எந்த எந்தப்பகுதியில் சாதியின் பெயரால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட போது அவர்களின் உறைவிடங்கள் எரிக்கப்பட்டபோது சாதிவெறியர்கள் துப்பாக்கி கொண்டு விலங்குவேட்டையாடியது போன்று அப்பாவி மக்களைச் சுட்டுப் பொசித்த போதெல்லாம் எங்களுடன் தோழோடு தோள்கொடுத்து போராடிய ஒரு வீரம் செறிந்த போராளி கே. டானியல். ''யார், யாருக்கு விடுதலை வேண்டுமோ அவர்களுக்கிடையே இருந்துதான் போராட்டங்கள் வெடிக்க வேண்டும் அப் போராட்டங்களுக்கு அவர்களே தலைமை தாங்க வேண்டும்'' என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டார் எமது சமூகத் தாபனமான அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் தொண்டனாக மட்டுமல்லாது சில ஆண்டுகள் உபதலைவராகவும் கடமைபுரிந்தார். இது போன்றே எமது கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப சங்கத்திலும் முக்கியப் பொறுப்புக்களை வகித்தார். 1963 இன் பின்னர் எமது கட்சியைவிட்டும், சமூகத் தாபனத்தைவிட்டும் வெளியேறிய போதிலும் அவரது இலட்சிய வேட்கையில் எதுவித மாற்றமுமின்றித் தீவிர அரசியல் போக்குடைய அரசியல் தாபனத்துடனும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துடனும் இணைந்து தனது பணியினைத் தொடர்ந்தார்.

எமது இயக்கத்தை விட்டு வெளியேறிய போதிலும் சமூக ரீதியான பொதுப்பிரச்சனைகளின் போதெல்லாம் அவ்வப்போது என்னைச்சந்தித்து ஆலோசனைகள் கலந்துரையாடல் செய்யப் பின்னின்றதில்லை. ஆற்றல்மிக்க படைப்பாளியாக விடாமுயற்சி உடைய உழைப்பாளியாக, இலட்சியப்பற்றுமிக்க போராளியாக, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் கே. டானியல் சாதாரண ஆசிரியர்களிடம்கூட முறையாக கல்வியினை முழுமையாகப் பெறமுடியாத கே. டானியல் இன்று பல்கலைக்கழக பேராசிரியர்களால் போற்றிப் புகழப்படுகின்றார் என்பதனை நினைக்கும் பொழுது மக்களுக்காக வாழ்பவர்கள் என்றும் மக்களால் மதிக்கப்படுவார்கள் என்ற உண்மை புலனாகின்றது. எனது நினைவலைகளில் கே. டானியலின் நினைவுகள் என்றும் பசுமையானவை.

---

**புகழ் பெற்ற நாவலாசிரியரும், அடக்கி, ஒடுக்கப்படுகின்ற மக்களின் விடிவுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயல் பட்டவருமான டானியல் தமக்கேற்பட்ட உடல்நோயை மாற்றிக் [கொள்வதற்காகத் தமிழகம் சென்று அங்கு வைத்தியம் செய்தார் எனினும் அவர் அமரராகிவிட்டார்.**

**அவரின் இறுதிநாட்கள் பற்றித் 'தோழமை' நூல் வெளியீட்டு நிறுவனம் டானியல் நண்பர்களுக்கு அனுப்பியகடிதம் இங்கு பிரசுரமாகிறது.**

# எழுத்தாளர் டானியலுக்கு தஞ்சை அளித்த சிறப்பு

'தோழமை' சார்பில் திரு. மார்க் எழுதிய கடிதம் இது,

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க அமைப்பாளரும் மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவரும் புகழ் பெற்ற நாவலாசிரியருமான தோழர் கே. டானியல் அவர்களின் மரணச் செய்தியை அறிந்திருப்பீர்கள்.

காலம் எல்லாம் அவர் எந்த மக்கள் மத்தியில் நின்று எந்த மக்களுக்காகப் போராடினாரோ அந்த மக்களுக்கும், அவரது இதர தோழர்களுக்கும் உறவினர்களுக்கும் இந்தச் செய்தியைத் தாங்கள் அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அச்சாகிக் கொண்டிருந்த அவரது 'கானல்' நாவல் வெளியீட்டு விழாவை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பத் திட்டமிட்டிருந்த தோழர் இடைக்காலத்தில் வலது கண்ணிலுள்ள ''காடராக்ட்'டை அறுவைச் சிகிச்சை மூலம் நீக்குவதற்காக மீண்டும் மார்ச் 19-ந் திகதி அன்று தஞ்சை தங்க சாரதா மருத்துவமனையில் சேர்ந்தார். அடுத்த நாள் டாக்டர் ராமையாவால் அவருக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. தொடர்ந்து அவர் உடல் நலமாகவே இருந்தது. தோழர் இளங்கோவனும் இதர தஞ்சைத் தோழர்களும் அவர் அருகிலேயே இருந்து அவரை மிகக் கவனமாகக் கவனித்துக் கொண்டார்கள்.

மார்ச் 23-ந் தேதி காலை எட்டு மணிக்கு தோழர் டானியலுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அருகில் தோழர் இளங்கோவன் இருந்தார். தங்கசாரதா மருத்துவ மனையிலிருந்த டாக்டர்கள் அனைவரும் ஓடிவந்து அனைத்துச் சாத்தியமான சிகிச்சைகளும் செய்தனர் எனினும் காலை 8-40 க்கு அவரது உயிர் பிரிந்தது.

நீரிழிவுநோய் மற்றும் அதன் விளைவுகளான கண்நோய் 'கிட்னி' பாதிப்பு முதலிய வற்றிற்கான சிகிச்சைக்காக சென்ற ஜனவரி 30-ந் நாள் அவர் இங்கு வந்தார். அவருடன் தோழர் வி. ரி. இளங்கோவனும் வந்திருந்தார்.

தஞ்சையிலுள்ள தங்கசாரதா மருத்துவமனையில் புகழ் பெற்ற நீரிழிவு மருத்துவரான டாக்டர் தனபாலன் அவர்களால் நீரிழிவு நோய் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டபின்பு மதுரையில் உள்ள 'அரவிந்தா' கண் மருத்துவ மனையிலும் சென்னையிலுள்ள 'சங்கர் நேத்திராலயா' கண் மருத்துவ மனையிலும் தோழரின் கண்நோய்க்கு லேசர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

உடல்நலம் முன்னேறியநிலையில் சென்னையிலும், பாண்டிச் சேரியிலும், குடந்தையிலும் தோழர் டானியல் இலக்கியகூட்டங்களில் கலந்து கொண்டு தனது இலக்கியப் பார்வைகளையும் அனுபவங்களையும் விளக்கிப்பேசினார்.

தமிழகத்தில் அவர் இருந்த மட்டும் இங்குள்ள தோழர்களாலும், இளங்கோவனாலும் அவர் மிகக் கவனமாகக் கவனித்துக் கொள்ளப்பட்டார். தமிழகத்தில் சாத்தியமான மிகச் சிறந்த வைத்திய வசதிகள் அவருக்கு வழங்கப்பட்டன.

நீரிழிவு நோயின் உச்சத்தால் கிட்னி இருதயம் முதலியவை பாதிக்கப் பட்டிருந்தன் விளைவாகவே இப்படி நிகழ்ர்து போயிற்றுஎன டாக்டர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

டானியல் அவர்களின் உடல் தஞ்சை வடக்கு வீதியிலுள்ள தோழர் மார்க் அவர்களின் இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், சென்னையிலும் மற்றும் இதர தமிழ் மாவட்டங்களிலுமிருந்த அவரது அனைத்து உறவினர்களுக்கும், தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் செய்திகள் தெரிவிக்கபபட்டன.

தமிழகத்தின் மிகமுக்கியமான செய்தி நாளிதழ்களாகிய 'இந்து' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தினமணி உட்படப் பல இதழ்கள் செய்தி வெளியிட்டன. அகில இந்திய வானொலியிலும் சென்னைச் செய்தியிலும் செய்தி அறிவிக்கப்பட்டது.

மார்ச் 23-ந் திகதி காலை 9 மணிமுதல் அவரது உடலுக்கு தோழர்கள் நண்பர்கள் அஞ்சலி செலுத்திய வண்ண மிருந்தனர்.

புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் தஞ்சைக்கிளையின் சார்பாகவும் 'தோழமை' வெளியீட்டு நிறுவனத்தின் சார்பாகவும் தோழரின் உடலுக்கு செங்கொடி போர்த்தி அஞ்சலிகள் தெரிவிக்கப்பட்டன.

டானியலின் உடலை எவ்வித மதச் சடங்குகளுமின்றி நல்லடக்கம் செய்வது என முடிவு செய்யப்பட்டது.

வடவாற்றங் கரையிலுள்ள ராஜாகோரி மயானத்தில் கடவுள் நம்பிக்கையற்ற தோழர்கள் உடல் புதைக்கப்படும் இடத்தில் பட்டுக்கோட்டை அழகிரியின் சமாதிக்கு எதிரில் மாலை 5-30 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

இறுதி அஞ்சலிக் கூட்டத்திற்குத் தோழர் வே. மு. பொதியவெற்பன் தலைமை தாங்கினர். பேராசிரியர்கள், எழுத்தாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

ஒருபுரட்சியாளருக்கான அனைத்து மரியாதைகளுடனும் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது உடல் நல்லடக்கம் செய்யப் பட்ட இடத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்படும். அவரது படைப்புக்கள் அனைத்தும் வெளியிடப்படும். விரைவில் அவரது படத்திறப்பு

(8-ம் பக்கம் பார்க்க)

---

## ஞாயிறு சிந்தனை

# அமைதி தேடும் உள்ளங்களுக்கு . . .

வாழ்வில் ஏமாற்றமும் உறவுகளில் பிரிவும், தனிமையும் விரக்தி உணர்வுகளும் ஏற்கனவே குழம்பிய மனிதனை மேலும் கலக்கமுற வைக்கின்றன. தாம் நம்பியிருர்த தலைவனைப் பாதிவழியில் பறித்து விட்டார்கள். சிலுவைதான் வாழ்வின் முடிவா என்று கலங்கிய நிலையிலிருந்த சீடர்களுக்கு யேசுவின் தெய்வதரிசனம் ஓர் உயிர்ப்பு அனுபவம் ''உங்களுக்குச்சமாதானம்'' இதுவே அவரது ஒரே செய்தி. ஆண்டவன் யேசு பிறந்த நாளிலும் வானத்தில் ஒலித்த செய்தி. உலகில் நன்மனது படைத்தவர்க்குச் சமாதானம் இறைமகன் யேசு பிறப்பிலிருந்து உயிர்ப்புவரை அவர் கொடுக்கும் செய்தி ஒன்றே. அது சமாதானத்தின் தூது. கடவுளின் மக்கள் சமாதானம் செய்வோர் [மத்5/9] பகைமை உணர்வுகளையும் சந்தேகங்களையும் சமூகங்களைக் கூறு போடுவதால் அமைதிகாண விழைகின்றது இவ்வுலகம். இவ்வுலகத்தார் தேடும் போலி அமைதியை அல்ல, மாறாக,

(8-ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

வீடு களையிழந்து போய்க் காணப்பட்டது. தலைவாயிலின் வலப்புறத் திண்ணையில் வசந்தமலர் அமர்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் பொன்னுத்துரை மாஸ்டரின் மனைவி பகவதி இருந்தாள். எதிரே இருந்த திண்ணையில் சங்கரன் படுத்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் பொன்னுத்துரை மாஸ்டர் யோசனையுடன் காணப்பட்டார்.

கந்தமூர்த்தி இறந்துபோய் இரண்டுநாட்கள் மறைந்துவிட்டன. இன்னமும் வசந்தமலர் சுயநிலைக்கு வந்தபாடில்லை.

அழுதழுது தொண்டை அடைத்துக் கதைப்பதற்குகூட இயலாமல் அவள் கஷ்டப்பட்டாள். செத்தவீடு நடந்த அன்றும், அதற்குப் பிறகு முடிந்துவிட்ட இரண்டு நாட்களும் எல்லாமாக மூன்று நாட்களும்- முறையான சாப்பாடோ தண்ணீரோ இல்லாமல் இருப்பது பகவதிக்குத் துன்பமாக இருந்தது.

''இப்படி இருந்து என்ன பிள்ளை செய்யப் போகின்றாய். எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி இருக்கப்போகிறாய்'' என பரிவுடன் கேட்டாள்.

''நான் உயிரோடு இருந்துதான் என்ன செய்யிறது அக்கா'' என மெல்லிய குரலில் வசந்தமலர் பதில் சொல்லும்போதே அவள் பழையபடி விம்முதலுடன் அழத்தொடங்கினாள்.

''இஞ்சைபார் வசந்தமலர். உப்பிடி நீ கதைக்கக் கூடாது. உனக்குத்தான் ராசா மாதிரி ஒருஆம்பிளைப் பிள்ளை இருக்கிறான் அவனை சிறப்பாக வளர்க்க வேண்டாமே. நீயும் இல்லாட்டி அந்தப் பெடியன் எப்படி இருப்பான். அவனை யார் பாக்கிறது. அதைக் கொஞ்சம் யோசிச்சுப்பார்.''

வசந்தமலருக்கு இப்போது சிந்தனை விரிந்தது. தனது மகன் சங்கரனை நினைத்துக் கொண்டாள். அவன் வாழ வேண்டியவன். எதிர்காலத்தில் சிறப்பானஓர் இடத்தை வகிக்கவேண்டியவன். கந்தமூர்த்தியின் பெயர் துலங்கச்செய்யவேண்டியவன். அவனை மண்ணுக்கலாமா?

பெற்றோரையும் ஏனையவர்களையும் பகைத்துக் கொண்டு எள்ளி நகையாடியவர்களை எதிர்த்துக் கொண்டு வாழத்தான் வேண்டும்என்று வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு இவ்வளவு காலமும் வாழ்ந்தாகிவிட்டது.

ஆனால் வாழ்க்கையில் சொற்பதூரம் பயணம் செய்யாத நிலையில் துணையாக வந்தவன் போய்விட்டான். போகும் பாதையும் நடந்துவந்தபாதையும் தெரியாத ஒரு அபலைப் பெண்ணின் நிலையில்தான் இருப்பதாகவசந்தமலர்நினைத்தாள். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற நிலையில் அவள் இருந்தாள்.

ஆனால் கந்தமூர்த்தி துணையாக இருந்தபோது இருந்த பொறுப்பைவிட பாரிய பொறுப்பு இப்போது அவளுக்கு இருந்தது. பகவதி சொன்னதிலும் நியாயம் உள்ளதாகஅவள்நினைத்தாள். தன் மகனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுகள் அந்தச் சமயத்தில் அவளுள் விழித்தெழுந்தன.

செத்தவீடு நடந்த பின்னர் வீட்டுக்கு வந்த அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஏதோ உலக ஒப்பாசாரத்துக்காகவும் தாங்களும் ஆறுதல் சொல்ல வேண்டும் என்பதற்காகவும் வந்த மலருக்குப் பலவிதமாக ஆறுதல்கள் சொன்னார்கள்.

வசந்தமலர் நீ ஏன் யோசிக்கிறாய் நாங்கள் என்னத்துக்கு இருக்கிறம்'' ''உனக்கு ஒன்று செய்ய வேணும். கொடுக்கிறதை நாலைந்து நாட்களுக்கு தன்னும் அவள் சமாளிக்க வேண்டாமே.''

அன்று அக்கம் பக்கத்து பெண்கள் தங்களுக்கும் பரஸ்பரம் கதைப்பதற்கும் தங்கள் பெருமைகளை ஒருவருக்கொருவர் உயர்த்திக் காட்டுவதற்கும் நான் அதைக் கொடுத்தேன். இதைக் கொடுத்தேன் என்று புகழ் பெறுவதற்காகவும் என்பதை வசந்தமலர் உணரவில்லை.

வேறு சிலரோ - திண்ணைகளில் கூடியிருந்து- ஊர்ப் புதினங்களை அலசினார்கள். அப்படி அலசும்போது வசந்தமலரினையும் அதற்குள் இழுத்துத் தங்கள் பேச்சுக்குத் துணை சேர்க்க முயன்றார்கள். ''அப்ப வசந்தமலர்-நீ-என்ன செய்யப் போகின்றாய்'' ''என்ன-மாதிரி - வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போகிறாய்-'' ''சகோதரங்களிடம் போகலாம் தானே-'' ''நல்ல கதை-செத்த வீட்டுக்குக்கூட வராத சகோதரங்கள் வீட்டுக்கு அவள் என்னென்று போவாள்.''

''ஓமோம் பச்சைத் தண்ணியைக் குடித்துக்கொண்டு- இருந்தாலும் உப்பிடியான

5

ஆட்களின் வீட்டுக்குப்போகக் கூடாது தான்.''

அவர்களே கேள்வியைக் கேட்டு-தாங்களே அதற்கான பதிலையும் கூறி உரையாடுவதைக்கேட்க-வசந்தமலருக்கு வேதனையாக இருந்தது-துன்பப்பட்டுக்கொண்டிருந்த அவளுக்கு அவர்களது பேச்சு மேலும் துன்பத்தைக் கொடுக்க-கண்ணீர்தான் பெருகியது. வருகின்றவர்கள் அவள் ஊண் உறக்கம் இல்லாமல் இருக்கின்றாளே என்பதைப் பற்றி- சிந்திக்காமல்- தாங்கள் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துவிட்டு - இருக்கின்ற வேதனையை பல மடங்காக்கி விட்டு-போனால் காணும்என்ற நினைப்புடன்-வந்துபோனார்கள்.

நடந்தால் நாங்கள் பேசாமல் இருப்பமோ உனக்கு ஏதும் பிரச்னை வந்தால் உடன் எங்களுக்குச் சொல்லு''.

''வசந்தமலர் முந்தி நீ புருஷனோடை இருந்தாய் இப்ப தனிச்சுப்போனாய் உனக்கு என்ன நடந்தாலும் துணைக்கு நாங்கள் இருக்கிறம். எதற்கும்பயப்படாதே''.

ஒவ்வொருவரும் இப்படி ஒவ்வொரு விதமாக வசந்தமலருக்கு சொன்னார்கள். அவர்கள் சொன்னவைகள் ஏதும் வசந்தமலரின் காதில் புகுந்து கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அந்த ஆறுதல் வார்த்தைகள் அவளை சஞ்சலப்படுதின.

எத்தனையோ நாட்கள் எப்படி எப்படியோ எல்லாம் கஷ்டப்படும் போதெல்லாம் கவனியாதவர்கள் தாங்களும் தங்கள் பாடும் என்று இருந்தவர்கள் எல்லாம் இன்று வசந்தமலருக்காக பரிதாப்பட்டு ஆறுதல் சொல்ல வெளிக்கிட்டிருந்தனர்.

சிலவேளைகளில் அடுப்பில் சோற்றுப்பானை ஏறுவதற்கே பிரச்சனையாக இருக்கும் அரிசி இருக்காது ஆனால் இந்த இரண்டு மூன்று நாட்களும் யார்யாரோ எல்லாம் விதம் விதமான சாப்பாடுகளை கொண்டு வந்து வைத்து விட்டு.

''பிள்ளை உனக்கும் உப்பிடி வந்திட்டுதே'' என்று கூறுவது வசந்தமலருக்கு சலிப்பினை ஊட்டியது.

அவர்கள் எதற்காக அப்படிச் செய்கின்றார்கள் என்பதை வசந்த மலரால் உணர முடியவில்லை.

ஆனால்...

''செத்தவீட்டுக்கு நீ என்ன கொடுத்தனி நான் இதைக் கொடுத்தேன்'' ''நான் அரிசியும் தேங்காய் மரக்கறி கொடுத்தேன் அது பெட்டைக்கு நாலைந்து நாட்களுக்கு காணும்''.

நீ ஏன் இவ்வளவு நாளும் கொடுக்கேல்லை. யாரும்அதைப் பற்றி ஏதும் குறையாக கதைக்க முதல் கொடுகிறதைக்கொடுத்து விடு'' ''உவள் பிள்ளையக்கா செத்த வீட்டன்று தேத்தண்ணி கொடுத்த தோடை விசியத்தை சுலபமாக முடித்துவிட்டாளாம். தனியே செத்த வீட்டுக்கு தேத்தண்ணி கொடுத்தால் காணுமே அந்த பெடிச்சி புருஷனை பறிகொடுத்துவிட்டு தின்ன வழியில்லாமல் இருக்கேக்க ஏதும் நல்லாய் தான்

★

இரண்டு நாட்களாக கந்தையர் மனநிம்மதி இன்றித் தவித்தார்-தான் படும் துன்பங்களைவிட-அவருக்கு வசந்தமலர் பற்றிய நினைவு அதிக வேதனையை தந்தது. கணவனை இழந்து - விதவையாகிவிட்ட அவள்மேல்-அவருக்கு இனம் தெரியாத ஒருவித பாசம்- ஏற்பட்டிருந்தது - அதன் காரணமாக - அவளை நினைந்து கவலைப்பட்டார்.

இளவயதுடைய வசந்தமலர்-தனது மகனுடன் எப்படி வாழ்க்கையை நடாத்தப் போகின்றாள் என்பதுதான் கந்தையருக்கு அதிக யோசனையைக் கொடுத்தது.

கணவனை இழந்து கைம்பெண்ணாக ஒரு இளம்பெண் வாழ முடியாது. வாழ இந்த சமூகம் விடாது. இன்று அனுதாபப்படும் சமூகம் நாளை செயற்கையான கதைகளை உருவாக்கி வாழவிடாது என்பது கந்தையருக்கு தெரிந்தது,

அவர் நீண்டநேரமாக யோசனை செய்துவிட்டு தங்கள் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி முருகன் கோயிலுக்கு முன்னால் இருந்த தங்கலட்சுமி வீட்டுக்குப் போனார்.

நடுத்தர வயதைத் தாண்டி, கணவனை இழந்துவிட்ட தங்கலட்சுமி வீட்டுக்குள் நுழைந்தபோது வீடியோவில் படம் பார்த்துக்கொண்டிருந்த தங்கலட்சுமி அவரை எதிர்கொண்டழைத்தாள். கந்தையர் இங்கு வருவது அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

வசந்தமலருக்கு தங்கலட்சுமி தூரத்து உறவு என்று கந்தையருக்கு சற்று ஞாபகம். அதனால் தான் தங்கலட்சுமி வீட்டுக்கு வந்தார்.

''வாருங்கோ வாருங்கோ'' என்று அவரை அழைத்து விருந்தையில் இருந்த கதிரையில் அமரச் செய்தாள்.

''என்ன இருந்தாற்போல் இந்தப் பக்கம்''

''ஒரு அலுவல் கதைக்கலாம் என்றுதான் வந்தனான்'' என்றார் கந்தையர். ''என்ன விசியம்''

''உங்களுக்கு அந்தபெட்டை வசந்தமலர் சொந்தம் தானே'' ''சொந்தம்தான் கொஞ்சம். எட்டத்து சொந்தம் என்னத்துக்கு கேட்கிறியள்''

''அதில்லை பாருங்கோ அந்தப்பெட்டையின்ர நிலைமை உங்களுக்கு தெரியும்தானே புருஷன் செத்துப்போன பிறகு அவள் எப்பிடி. தன்னுடைய வாழ்க்கையைக் கொண்டு நடாத்தப் போகிறாள் என்று நினைக்க கவலையாக இருக்குது அதுதான் உங்களோடை கதைக்கலாம் என்றுதான் வந்தனான்''

''நாங்கள் என்ன செய்யிறது'' என்று தங்கலட்சுமி கேட்கும் போது அவளது முகத்தில் மாறுதல் ஏற்பட்டது.

''வசந்தமலர் தனியே இருந்து ஒன்றும் செய்ய முடியாது. அவள் யாருடைய உதவியை பெற்றால் தான் வாழலாம். அதுக்கு உங்களைப் போல ஆட்கள் தான் தேவை. நீங்கள் சொந்தக்காரர். நாங்கள் வெளியில் ஆட்கள்''

''நாங்கள் என்ன செய்ய வேணும் என்று சொல்லுறியள்''. ''நீங்கள நினைத்தால் அவளுக்கு உதவி செய்யலாம்''. ''என்னென்று''

''நீங்கள் அவளைக் கூட்டிக் கொண்டு உங்களோடை வைத்திருந்தால் காணும். உங்களுக்கும் உதவியாகுது. அவளுக்கும் பரவாயில்லை'' என கந்தையர் சொன்னார்.

அவரது பேச்சு தங்கலட்சுமிக்கு சங்கடத்தைக்கொடுத்தது. அதற்கு என்ன பதில் என்று சொல்வது என்று தடுமாறினாள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பண்டிதமணி நினைவஞ்சலி

[வெண்பா]

நல்லைநகர் ஆறுமுக நாவலர்தம் வாரிசெனச்
சொல்லு தமிழ்வளர்த்த சோதியே—எல்லையில்
சித்தாந்த சாகரமே! சீரான நின்பணிய்ய
நித்தமும் போற்றுதும் நின்று.

பண்டித மாமணியே ஐயாபண் போடன்பாய்
எண்டிசை போற்றும் கலாநிதியே — தொண்டதனால்
நல்லாசிரியர் குலம்விளங்க வாழ்ந்தனையே
எல்லா எழிலும் இயன்று.

இலக்கிய நன்னயங்க ளெல்லாம் இனிமையாய்த்
துலக்கும் இராமாயணக் காட்சி — இலங்கியே
ஓங்கு கலாசார மோதுகந்த புராணமாய்
நீங்குமோ வாழ்வில் நெறி.

செந்தமிழ் வாழ்த்தத் திருசைவ நீதிநெறி
பந்தமில் வாழ்வினைப் பற்றியே — சிந்தித்து
வாழ 'அன்பி னைந்திணை' நூலாக 'அத்துவைதம்'
நீள விளக்கினையே நின்று.

[கட்டளைக் கலித்துறை]

மட்டுவில் தந்த மகாலிங்கப் பண்டிதன் மாண்பதியே
கட்டுரைவல்ல கணபதிப் பிள்ளையைப் பெற்றெடுக்கச்
சொட்டும் கலைவளம் சூழ்திரு நெல்வேலி சேர்பதியிற்
சிட்டென வாழச் சிறுகுடில் செய்ததென் மாதவமே.

ஆரியஞ் செந்தமிழ் ஆய்ந்த புலமைசேர் ஆரியனும்
பாரிய நன்னூல் பரந்த இலக்கியம் பண்டிதனும்
சீரிய சித்தாந்தத் தேனைச் சுரந்த சிவமணியாம்
பேரியல் பண்டித மாமணி தம்புகழ் பேசுதுமே.

காவியக் கல்லூரி கண்டாய் கவின்பெற ஆசிரியர்
மேவு கலாசாலை முப்பது ஆண்டுப் பணிமுடித்தாய்
காவிய மன்ற முதலாய்ப் பெரும்பல் கலைக்கழகம்
தேடியே பட்டங்கள் சூட்டத் திருவருள் தேர்ந்தனையே.

சிந்தனைச் செல்வராய்ச் சேர்ந்தநல் சித்தாந்த சாகரமாய்
வந்தவர் ஐயம் வழுவிலா தோட்டிடும் வள்ளலெனப்
பந்தனை யற்றுப் பழுதில் பிரமசரியநெறி
மூந்தையர் நாவலர் போற்றி மூத்ததமிழ் காத்தனையே.

வித்தக மேலோன் விரும்புகணே சையக் குருநாதர்
சுத்த விலக்கணஞ் சொல்லவல் சுப்பைய பிள்ளைநெறி
முத்தமிழ் காத்தவெம் மூதறி பண்டித மாமணியும்
அத்து விதம் காட்டி அரனடி சேர்ந்தாரீங் காருளரே,

நல்லைநகர் ஆறுமுக நாவலர் ஈங்கில்லை யென்றிருக்க
எல்லையில் இன்ப இலக்கியங் காட்டிட ஈங்குதித்துத்
தொல்லருஞ் சித்தாந்த மாண்புந் தெளிவித்துத் துய்ய தமிழ்
அல்லல் அறுத்த அறிவுச் சுடரே அணைந்தனையே.

—மயிலங்கூடலூர் த. கனகரத்தினம்

## வெற்றி வேற்கை

அதிவீரராம பாண்டியன் செய்த வெற்றி வேற்கை [நறுந்தொகை] நூல் 'மில்க்வைற்' தாபகர் வீ. மு. கர்தையா அவர்கள் நினைவாக அன்னாரின் புதல்வரும் தொழிலதிபருமான க. கனகராசாவினால் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது. அறநூல் வரிசையில் ஏற்கெனவே ஆத்திசூடி, கொன்றைவேந்தன். உலகநீதி, நல்வழி, முதலானநூல்களை திரு கனகராசா இலவசமாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிவேற்கை எனும் நறுந்தொகை நூல் பொழிப்புரையுடனும் ஆங்கில மொழிபெயர்ப்புடனும் வெளிவந்துள்ளது.

## எமது சிறுகதை

# வாசம் வீச விரிந்த மலர்

கொட்டடியூர் பாஸ்கரன்

அன்று பௌர்ணமித் திருநாள். யாத்திரிகர் கூட்டம் வழக்கத்தைவிட சற்று அதிகமாக இருந்தது. யாத்திரிகர்களில் சிலர் கேணியை நோக்கி நீராடுவதற்காக சென்று கொண்டிருந்தனர். சிலர் கடற்கரையில் நின்று கடலைப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்றனர். நீராடியவர்கள் கேணிக்கு அருகாமையில் வரிசையாக நின்று கொண்டிருந்த பூவரசமரங்களில் ஆடைகளை உலர வைத்து விட்டு; அந்த நிழலில் அமர்திருந்துகொண்டு பல வகையான கதைகளையும் கதைத்துக் கொண்டு இருந்தனர். ஆண்களும், பெண்களும் ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது.

கடற்கரையில் நின்று கொண்டிருந்தவர்களின் மத்தியில் ஒரே பரபரப்பு. எல்லோரும் கடற்கரையில் இருந்த பற்றையை நோக்கி ஓடினார்கள். பூவரசமரங்களின் நிழலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். அங்கே பற்றைக்கருகில் ஓர் இளம் பெண் மல்லர்ந்த நிலையில் கிடந்தாள். அவள் உயிர் அவள் உடலை விட்டு பிரிந்திருந்தது. யாத்திரிகர்கள் அனைவரும் அங்கு கூடிவிட்டனர். அவர்கள் மத்தியில் இருந்த ஒரு இளம் பெண். ''லதா நீயா'' என்று அலறிக் கொண்டு சடலமாகக் கிடந்த அந்தப் பெண்ணை நோக்கி ஓடினாள்

விமலா, அந்த அதிர்ச்சியிலிருந்து சற்றும் மீளவில்லை. வட்ட நிலவுபோல பிரகாசித்த அந்த அழகு முகம் உணர்ச்சியற்று, உருவிழந்து கிடந்தது. அவள் நெஞ்சை ஏதோ செய்தது. அந்தசனக் கும்பலையும் பொருட்படுத்தாத அவள் 'ஓ' வென்று கதறியழுதாள்.

ஆம், விமலாவின் அந்தரங்கத்தோழியல்லவா லதா. அவளின் அந்தத் திடீர் முடிவு நிட்சயம் விமலாவைக் கலங்க வைத்ததில் வியப்பில்லைத்தான் சிறுவயது தொட்டு சிங்காரமாய்த் திரிந்த அந்தஅழியாத நினைவுகள் அவள் கண் முன்னே விரிந்தன.

லதா ஒரு சாதாரண குடும்பத்தில் மூன்றாவது பெண். அவள் தந்தை அரசாங்க ஊழியராக கடமையாற்றினார். லதா சிறு குழந்தையாக இருக்கும்போதே தந்தை இறந்து விட்டார். அவரின் ஓய்வூதியப் பணத்தைக் கொண்டு மூன்று பெண் பிள்ளைகளை கஷ்டப்பட்டு வளர்த்தாள் தாய் பூரணம். கடைக்குட்டியான லதாவை கல்லூரி வரை படிப்பித்தாள் பூரணம்.

லதா கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தாலும்; அவளுக்கு அழகை ஆண்டவன் அள்ளிக் கொடுத்திருந்தான். கல்லூரிக்குச் சென்று வரும் போது பல இளைஞர்கள் அவள் அழகை ரசிப்பார்கள். அவள் வருவதைக் கண்டதுமே தங்கள் நிலை மறந்து நிற்பார்கள். லதா தன் அழகைப்பற்றி பெருமைப்பட்டுக் கொள்வாள். எத்தனையோ பேர் அவளைப் பார்த்து ரசிக்கும் போதும் பக்கத்து வீட்டு ரஞ்சன் மீது அவளுக்கு உள்ளார்ந்த காதல் பிறந்தது. எப்படியாவது ரஞ்சனைத் தன் அழகுக்கு அடிமைப்படுத்தி விடவேண்டும் என்பதையே முடிவாக எடுத்துக் கொண்டாள். அவள் எண்ணமும் பலித்தது.

காதலர்கள் இரவில் சிறகடித்துப் பறந்தனர். ஒரு நாள் ரஞ்சன் லதாவை வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தான். முதலில் மறுத்த லதா பின்னர் வீட்டிற்குச் சென்றாள். அன்று வீட்டில் யாரும் இல்லாததை அறியும் போது அவளுக்கு முதலில் பயமாக இருந்தது, இருந்தும் அவனின் காதல் வார்த்தைகளை நம்பினாள். அந்த நாளே அவர்களின் முதல் இரவாக இருந்தது. அதன் பின்னர்தான் அவன் தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினான்.

தொடர்ந்து படிப்பில் அவளால் ஆர்வம் காட்ட முடியவில்லை. வீட்டில் மூத்த இரு சகோதரிகளும் திருமணத்திற்காக காத்திருக்கும் போது; தன் படிப்பிற்காக தாய் பூரணம் கஷ்டப்படுவதை லதா விரும்பவில்லை. படிப்பை நிறுத்திக்கொண்டாள். வீட்டிலேயே சிறை இருந்தாள் லதா.

லதாவின் வீட்டிற்கு அருகில் வெகு நாட்களாகவே வாடகைக்காக காத்து இருந்த வீட்டிற்கு சிலநாட்களாக யாரோ புதிதாக குடிவந்து இருந்தனர். அவர்களைப் பற்றி அறிவதற்கு லதாவும் அவளின் சகோதரிகளும் விரும்பி அவர்கள் வீட்டிற்குச் சென்றாள். அங்கு நின்ற பெண்ணிடம் தன்னை முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டு லாதா அவர்களைப்பற்றி கேட்டறிந்து கொண்டாள். இருவரும் புதிதாகத் திருமணம் செய்து வீட்டிற்கு குடிவந்திருப்பதாகக் கூறி தன்கணவனையும் அறிமுகப்படுத்தி வைத்தாள் அந்தப் பெண்.

கடைகளுக்குச் சென்றுதனது வீட்டுச் சாமான்கள் வாங்கி வரும் பொறுப்பை லதாவே எடுத்து வந்தாள். ஒருநாள் கடையில் இருந்து வரும் பொழுது கார் ஒன்று திடீரென்று அவள்அருகில் வந்து நின்றது. அவள் பயந்துவிட்டாள். காரில் ஏறும்படி கேட்டவாறு கதவைக் திறந்து விட்டான் இந்திரன். லதாவும் காரில் ஏறிக்கொண்டாள். லதா தான் காரில் வந்ததைத் தாயிடம் கூறினாள். அதன் பின்னர், லதா இந்திரனின் வீட்டிற்கு அடிக்கடி போய் வந்தாள். 'ரீ. வி.' பார்ப்பது ஒரு சாட்டாக அமைந்தது. ரீ வி யில் படம் பார்த்த பின்னர் இந்திரன் லதாவைக் கூட்டிக்கொண்டு அவள் வீடுவரை வருவான். இது வழக்கமாகி விட்டது.

ஒருநாள் லதாவின் கையை இந்திரன் திடீரென்று பற்றினான். இதை லதா எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. நாளடைவில் இந்திரன் அவளை இரண்டாந் தாரமாகத் திருமணம் செய்வதாகத் ஆசை காட்டினான். அவனுடைய மனைவிக்கும் இவர்களுடைய தொடர்பு தெரியவந்தது. இதனால் கணவனுடன் வீட்டையே காலி செய்து, வேறிடத்துக்கு வீடு மாறிவிட்டது இந்திரன் குடும்பம். அயலவர்கள் லதாவைப் பற்றி வாய்க்கு வந்தபடி கதைக்கத் தொடங்கினார்கள்.

அதை சகித்துக் கொள்ள முடியாத பூரணம் லதாவுடனும் மற்றைய இரு பிள்ளைகளுடனும் மிகவும் கண்டிப்பைக் காட்டத் தொடங்கினாள். லதாவை பழையநினைவுகள் வாட்டத்தொடங்கினாலும் புதிய வாழ்வை வாழவே விரும்பினாள். விலகி விலகிச் சென்றவளை விதி வீதிக்கே கொண்டு வந்தது. பல பொதுத் தொண்டுகளில் ஈடுபடத்தொடங்கினாள். விதி விளையாடியது. பொதுத் தொண்டுகளில் ஈடுபட்ட லதாவிற்கு லிங்கம் என்ற இளைஞனின் தொடர்பு ஏற்பட்டது. லிங்கத்தின் தொடர்பை முதலில் லதா விரும்பவில்லை. லிங்கத்திற்கு லதாவின் பழைய கதை ஓரளவு தெரிதிருந்தது. ''பலர் உங்களை ஏமாற்றியதினால் என்னையும் அப்படி நினைக்கிறீர்கள்'' என்ற அவனின் பசப்பு வார்த்தைகளால் லதா மனம் மாறினாள். இறுதியில் அங்கும் அவள் தழுவியது ஏமாற்றமே.

இந்த ஏமாற்றங்கள் ஆண் இனத்தையே பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தை லதாவின் மனதில் உருவாக்கின. அதன்பயன் அவள் ஒரு மன நோயாளியானாள்., ஓ! வாசம்வீச விரிந்த மலர் வாடியுதிர்ந்தது.

[யாவும் கற்பனை]

# கவிஞர் சத்தியசீலனின் குழந்தைக் கவிப்பணி

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பா. சத்தியசீலன் நாடறிந்த கவிஞர். தற்போதைய நிகழ்வுகளை யெல்லாம் கவிதையிலே வடித்துவிடுகிறார். ஈழத்துத் தமிழ்க் கவிஞர் வரிசையிலே சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொள்ளும் சத்தியசீலன் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்குமாக அருமையான கவிதை புனைவதிலும் வல்லவராயுள்ளார். அவருடைய கவிதைகளிலே திகழும் சொல் வடிவங்களுக்குச் சித்திர ஓவிய வடிவங் கொடுத்து வருபவர் ரமணி. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகக் குழந்தைக் கவி புனைந்துவரும் இக் கவிஞரின் முதன் முயற்சியாக [ரமணியின் கைவண்ணத்துடன்] இத்துறையிலே மழலைத் தமிழ் அமுதம் என்னும் தொகுதி வெளியாயிற்று. ஆனால் ஓவியங்களில்லாமல் சிறுவர்களுக்கெனப் புனைந்த கவிதைகளின் தொகுதியாக பாட்டு 1969-ல் வெளியாயிற்று. அத்தொகுதிக்கு 'என் மொழிவு' எழுதிய கவிஞர் ''இப்பாட்டுத் தமிழ் மதலைப் பாட்டுக்கள் அல்ல; அதாவது பள்ளி முன் பருவத்தினருக்குரியதல்ல. பிள்ளைத் தமிழும் அல்ல; அதாவது மூன்றும் வகுப்புக்கு உட்பட்டோருக்கு உரியதல்ல. அழகான உலகு இளம் சிறுவருக்குப் பொருத்தமானது எனலாம். மற்றையவை பொதுவாக இடைநிலை வகுப்புகளுக்கு ஏற்றவை' என்று ஆசிரியர் மதலைப் பாடல், பிள்ளைப் பாடல், சிறுவர் பாடல் என்னும் மூவகைக் குழந்தைப் பாடல்களை இனங்காண்கிறார். இத்தகைய பருவத்தினர்க்காகக் கடந்த 25 வருடங்களாகப் பாப்புனைந்து வருங்கவிஞரின் திறன் பாராட்டுக்குரியதாகும்.

கவிஞர் சத்தியசீலனின் மழலைத் தமிழ் அமுதம் வெளிவந்தபொழுது அது மழலைப் பாக்களுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கியது. குழந்தைகளைக் கவரத்தக்க வண்ணச்சித்திர ஓவியங்கள் பாப்பொருளைக் குழந்தைகளின் கட்புலனுக்காக்கின. செவிப்புலனுக்கு விருந்தளிக்கும் வண்ணச் சந்தங்களுடைய பாடல்கள் கட்புலனுக்குமாயின. இதுஈழத்துக் குழந்தைப் பாடல் வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும். மழலைத் தமிழ் அமுதம் கவிஞருக்கு நல்ல ஊக்கத்தினை வழங்கியது. இத்துறையிலே அவர் விசேட கவனஞ் செலுத்தலானார். இந்தவகையிலே அவருடைய வளர்ச்சி முயற்சி பாட்டுக்கூத்து, புத்தியால் வென்ற நத்தையார், கப்பல், நத்தார் வாழ்த்து, உயிர் காத்தஓவியம்' என்னும் தொகுதிகளாக மலர்ந்தது. ரமணியின் கைவண்ணத்திலே அவை புதுப்பொலிவுடையனவாக அமைந்தன. இந்த வரிசையிலே கவிஞரின் இன்னொரு தொகுதி தமிழுக்கு அழகு செய்யவுள்ளது; தமிழ்க் குழந்தைகளுக்கு விருந்தளிக்கவுள்ளது. அதுதான் கவிஞர் சத்தியசீலனின் உயிருக்காக என்னும் சிறுவர் பாடல் தொகுதி.

இத்தொகுதியிலே உயிருக்காக, எழுதிய மருந்து, உறங்காத அந்த ஒற்றைக்கண், எதிலும் பாதி, எதற்கும் முந்தி, நன்றி யாருக்கு என்னும் ஆறு கதைப்பாடல்களுண்டு. முயலை விரட்டி அதன்பின் ஓடித் தோற்ற வேட்டை நாயினை ''உன்னிலும் முயலே ஓட வல்லவன்'' என அந்நாயின் எஜமான் கூறியபோது,

''எஜமான் சொன்னதும்
சரிதான்; எனினும்
நான் ஓடியதோ
உணவுக்காக
முயல் ஓடியதோ
உயிருக்காக''

என்று கவிஞர் 'உயிருக்காக' என்னும் கதைப் பாடலிலே அமைக்கின்றார். சிறுவர்க்கான கவிதைக் கதையினை 'நறுக்கெனத் தொடங்கும் கவிஞரின்' ஆற்றலை 'எதற்கும் முந்தி' என்னும் பாடலில்,

''கோவலூர் அரசர்
குழந்தை போன்றவர்
மந்த ரான
அந்த மன்னவர்
மந்திரி சொல்லிலே
மயங்கிக் கிடந்தார்''

என்னும் தொடக்கவரிகள் வெளிப்படுத்துகின்றன.

குழந்தைப் பாடல்களிலும் குறும்பு காட்டும் பாவலன் பா. சத்தியசீலன். 'நன்றி யாருக்கு' என்னும் பாடலை உதாரணமாகக் காட்டலாம். சீதை என்னும் பெண்ணை ஓவியமாக்கி வருகிறான் ஒருவன். அப்படம் சிறந்ததெனில் சீதையினுடைய நாய் அப்படத்தினைப் பார்த்தவுடன் தன் எஜமானியே என எண்ணிப் பாய்ந்து வந்து வாலை ஆட்டிக் காலை நக்கும். எனவே ''நாளை இந்த ஓவியத்தைக் கொண்டு வாரும் சோதித்துப் பார்த்துப் பரிசு தருவோம்'' என நடுவர்கள் கூறினர். அவனும் அடுத்த நாள் ''மீண்டும் அப் படத்தைப் போட்டிக்குரிய தாய்ப் புதுக்கி'' வந்தனன். சீதையின் நாய் படத்தை மோப்பம் பிடித்து நாவால் நக்கவுந் தொடங்கியது. பரிசு பெற்றவுடன்,

ஆயினும் அந்த
ஓவியன் தனக்குள்
''பன்றிக் கொழுப்பே
நன்றி'' என்றனன்!
பரிசு பெற்றது
பன்றிக் கொழுப்பே!

என ஓவியன் கூறியதாகக் கவிஞர் அமைத்துள்ளது குறும்புத்தனமிக்க பகுதியாகும். சுவை பற்றிக் கூறும் தொல்காப்பியர் ''நகையே... ...'' என்று தன் சூத்திரத்தைத் தொடங்குகின்றார். அதிலுள்ள ஏகாரம் உயர்வு சிறப்பு எனக்கொண்டு சுவைகளுக்குள் மிகச் சிறந்தது நகைச்சுவை எனக் கூறுவாரும் உளர், சத்தியசீலனுடைய சிறுவர் கதைப் பாடல்கள் மூலம் இச்சுவை புலப்படுவதைக் காணலாம். ஆனால், அச்சுவை புத்தி, விம்பகம் நிலைமைக்கேற்றபடி முடிவு செய்தல்,

(8-ம் பக்கம் பார்க்க)

## கற்சிலை யாமெனக் கலங்கி நின்றாளே!

முற்றிய ஞானியாம் முத்தமிழ் ஓதுநம்
நற்றமிழ் வல்லுநன் டண்டித மாமணி
பற்றினன் சிவபத மென்னலும் தமிழனை
கற்சிலை யாமெனக் கலங்கி நின்றாளே!

கல்வியின் வரம்பினைக் கண்ட பேரறிஞனைத்
தொல்லியல் நூல்களைச் சுவைதர விளக்குநன்
பல்கலை ஞானியாம் பண்டித மாமணி
இல்லையெ னில்தமிழ் எந்நிலை யாகுமோ

பைந்தமிழ் வளர்த்த எம் பண்டித மாமணி
செந்தமிழ் ஓகவோ தேவுல கேகினன்
இன்தமிழ் இங்கெலாம் எந்நிலை யாகுமோ
என்தமிழ் நாட்டினர் ஏங்கியுள் வாடவே!

'கண்டாவளைக் கவிராயர்'

# ஈழத்தமிழிலக்கிய சஞ்சிகை வரலாற்றில்

## 'புதுசு'வின் பண்பும் பணியும்

[முன் தொடர்ச்சி]

''புதுசு'' வில் இடம்பெற்ற திறனாய்வு தொடர்பான கருத் தோட்டங்களில் இருவிடயங்கள் தனியே கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் உடையவை. ஒன்று 'சஞ்சயன் பக்கங்கள்'; இன்னொன்று புதுசு பத்தாவது இதழில் இடம் பெற்றுள்ள சேரன் கவிதை பற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் விமர்சனம சில எதிர் நியாயங்கள்' என்ற கட்டுரை. இவற்றுள் 'சஞ்சயன் பக்கங்கள்' புதுசு வின் 'ஆத்மாவின் குரல்' என்றே கூறலாம். பயிர்வளர்வதற்கு உரம் இடுவது எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் களை அகற்றுவதற்கும் உண்டு. இதுவே சஞ்சயனின் நிலைப்பாடு, சமகாலக்கலை இலக்கிய ஊழல்களை நக்கீரப் பார்வையுடன் கண்டித்துக் குரல் எழுப்புவதிலும் தவறுகளை இனங்கண்டு சுட்டிக்காட்டுவதிலும் சஞ்சயன் பக்கங்கள் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளன. இலக்கியச் செல்நெறியின் வரலாற்றுப் போக்கினைத்திரிபு செய்வோரும் மேலோட்டமான தகவல்களுடன் பூசிமெழுகுபவர்களும் சஞ்சயனால் பாதிக்கப்பட்டனர்; பாதிக்கப்பட்டு வருகின்றனர். சான்றாக ஒன்றைக் காட்டலாம். கொழும்பிலிருந்து வெளிவரும் குமரன் சஞ்சிகையின் 57 வது இதழில் [நவம்பர் 1982] அதன் ஆசிரியர் செ. கணேசலிங்கன் அவர்கள்,

''தமிழ் ஈழப்பிரச்னை மேலும் வலுப்பெற்று வருகிறது. யாழ். சிற்றேடுகளே இப்பிரச்னை பற்றி மௌனம் சாதிப்பது வியப்பே காரணம் அச்சம், தெளிவான கண்ணோட்டமின்மை. சிலர் மேலோட்டமான உணர்வு நிலையாகக் கருத்து முதல்வாத முறையில் விளக்கம் கூறமுனைகின்றனர்.'' எனக்குறிப்பிட்டிருந்தார். இக்கருத்து அடுத்து வந்த குமரன் இதழின் உள்ளடக்கத்தில் மேலும் விரிவாக இடம் பெற்றது. இக்கருத்து ஒருவரலாற்றுத் திரிவு ஆகும். 1976-ஆம் ஆண்டுமுதலே யாழ். சஞ்சிகைகளில் தமிழரின் இனப்பிரச்னை கவனத்தைப் பெற்றுவந்துள்ளது. அலை, சமர், மல்லிகை, சிரித்திரன், மேகம் முதலிய வெவ்வேறு நிலைப்பாடுகள் கொண்ட சஞ்சிகைகளும் புதுசுவும் தமிழரின் இனப்பிரச்னை தொடர்பான படைப்புக்களையும் கருத்துக்களையும் முன்வைத்து வந்துள்ளன. அலையின் பத்தாவது இதழில் [1977] 'தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி; பாதுகாப்பை வழங்கு'' என்ற தலைப்பிலமைந்த தலையங்கமும் புதுசு மூன்றாவது இதழில் [1981] இடம்பெற்ற சேரனின் முற்சுட்டிய ''இலங்கையின் தேசிய இனப்பிரச்னை தொடர்பான ஒரு அணுகுதல்'' என்ற கட்டுரையும் இத்தொடர்பிற் சுட்டிக் காட்டத்தக்கவை. புதுசு ஏழாவது இதழில் [மே 1983] சஞ்சயன் செ. கணேசலிங்கனின் இவ்வரலாற்றுத் திரிபைச் சுட்டிக்காட்டி அவரது கருத்தின் தவறை ஆதாரங்களுடன் கண்டித்தது.

### கலாநிதி
### நா. சுப்பிரமணியம்

கண்டனங்களாக மட்டுமன்றி ஆக்கபூர்வமான சுவைக் குறிப்புக்களும் பிறமொழி இலக்கியத் தகவல்களும் சஞ்சயன் பக்கங்களில் வெளியிடப்பட்டுவந்துள்ளன. பிறமொழி இலக்கியத்தகவல் என்ற வகையில் புதுசு 9-வது இதழில் இடம்பெற்றுள்ள தெலுங்கு 'திகம்பரகவி' கள் பற்றிய அறிமுகம் முக்கியமானது. செரபண்டராஜு, நக்சன முனி, ஜ்வாலாமுகி முதலிய இத் தீவிர அரசியல் இயக்கக் கவிஞர்கள் பற்றிய செய்திகள் ஈழத்து இலக்கியக்காரர் பலருக்கும் முன்பே தெரிந்தவைதான் எனினும் இன்றைய போர்க்களச் சூழ்நிலையில் அவர்களை மீளநினைவுக்குக் கொணர்ந்தமை ஆக்கபூர்வமான செயற்பாடாகவே கொள்ளத்தக்கது புதுசு பத்தாவது இதழில் சஞ்சயன் பக்கங்களில் வெளிவந்ததெலுங்கு கெரில்லாப்படை முன்னணி வீரனும் கலைஞனுமாகிய சுப்பாராவ் பாணிக்கிரஹி பற்றிய விரிவான குறிப்பும் மிகப் பயனுடையதாகும். இன்று உருவாகும் எமது இளைய கலைஞனுக்கு திகம்பரகவிகளும் பாணிக்கிரஹிகளும் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

புதுசு பத்தாவது இதழில் 'மணியம்' எழுதிய சேரன் கவிதைகளும் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்துக்களும் பற்றிய கட்டுரை சமகாலக்கலைஞனொருவனதும் அவனுடைய கலையாக்கங்களினதும வர்க்க அடிப்படைகளை நுனித்து நோக்கும் முயற்சியாகும். சேரனின் கவிதைகளைச் தேசிய பூர்ஷ்வா வர்க்கச் சார்பானவை என மதிப்பிடும் இக் கட்டுரை தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்கான இயல்பைப் பேராசிரியர் மார்க்சிசம் எனக்கருதி மயங்கியுள்ளார் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளது. இக் கட்டுரை முன்வைத்துள்ள நியாயங்களும் அவற்றின் அடிப்படையான வாதங்களும் விரிவான தளத்திலான ஆய்வு ஒன்றின் மூலம தீர்மானிக்கப்படத்தக்கன. எனினும் இக்கட்டுரை தனிப்பட்ட ஒரு கலைஞனின் ஆளுமையினையோ முக்கியத்துவத்தையோ குறைத்து மதிப்பிடும் நோக்கில் அமைந்ததல்லஎன்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும். மேலும் சேரனின் படைப்புக்கள தொடர்பாக முன்வைக்கப்பட்ட இந்த நுணுக்கமானவர்க்கப்பார்வை புதுசுவின் ஏனைய படைப்பாளிகள் தம்மைத்தாம் சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டிய ஒரு கட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆரோக்கியமான அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இத்தகைய சுய விமரிசனங்கள் மிகமிக அவசியமாகும்.

புதுசுவில் வெளிவந்த ஆராய்ச்சிகள் என்றவகையில் இரண்டு கட்டுரைகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஒன்று எம். ஏ. நுஃமன் ''... நாடகங்கள்-சில கருத்துக்கள்'' என்ற தலைப்பில் (புதுசு 3 4) எழுதியது. இன்னொன்று வ. ஐ. ச. ஜெயபாலன் எழுதிய ''யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார வரலாறு'' [புதுசு-2) என்பது. இவ்விரு கட்டுரைகளும் அவ்வப் பொருண்மைகளில் காத்திரமான முயற்சிகளாகும்.

[அடுத்தவாரம் முற்றும்]

## கவிஞர்

(7-ம பக்கத் தொடர்ச்சி)

யுகதி ஆகியவற்றின் அடிப்படையிலேயே புலப்படுவதைக் காணலாம்.

ரமணியினுடைய சித்திர ஓவியங்கள் பாடல்களுக்கு மெருகேற்றுகின்றன உணவுக்காக ஓடும் நாயினையும், உயிருக்காக ஓடும் முயலினையும், பன்றிக் கொழுப்பினை நக்கும் நாயினையும், உணர்ச்சிப் புலப்பாட்டுடன் வரைந்துள்ளார். ஏனைய ஓவியங்களும் அப்படியே அமைக்கப்பட்டுள்ளன.

ஈழத்தமிழர்களுடைய மொழியிலே வழங்கும் சிலசிறப்பான பிரயோகங்கள் பாடல்களிலே கையாளப்பட்டுள்ளன. அவை பாடல்களுக்கு உயிர்த் துடிப்பளிக்கின்றன.

எழுதித் தந்த
இந்த மருந்தை
இரவு படுக்கமுன்
எடுத்தாற் போதும்

என்னும் பகுதியிலே இடம் பெறும் ''மருந்தை எடுத்தல்' தொடர் தமிழ் டாக்டர்களுடைய ஆங்கில வழிவந்த [Taking medicine] பிரயோகமாகும். ''சப்பி விழுங்கினுர்'' ''நல்ல மருந்தெணை'', ''கொள்ளிக் கணணன் குழறக் குழற'' ''நாக்குத் தடக்க,'' ''படத்திலே அச்சொட்டாக'', வளைய வந்தும்'' என்னுந் தொடர்கள் எம்முடைய மொழியிலே சிறப்பான பிரயோகங்களாகும். இவை பாடற்பொருளை எச்சிறுர்கள் இலகுவாக விளங்கிக்கொள்ள உதவுவன.

கவிஞர் சத்தியசீலனின் குழந்தைக் கவிப்பணி மேலுந் தொடர வாழ்த்துகிறேன். ஈழத்துத் தமிழ்க் குழந்தைகளுக்குப் பாப் புனையும் இப் பாவலனுக்குத் தமிழுலகம் நல்ல ஊக்கம் கொடுக்கும்.

## தொடர் நவீனம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

''என்ன யோசிக்கிறியள் உங்களுக்கும் உதவியாகுது அல்லது ஒரு நல்ல காரியம் செய்யிற மனநிம்மதியாவது கிடைக்கும். பெட்டைக்கு வேறையாட்களின் உதவியும் இல்லை. சகோதரங்களின் ஆறுதலும் இல்லை...... நீங்கள்தான் ஏதாவது வழி செய்ய வேணும்'' என கந்தையர் மேலும் சொன்னுர்.

''எதற்குப் நான் என்ரை பிள்ளையளோடை யோசித்துப் போட்டு சொல்லுறன்'' என்றுர் தங்கலட்சுமி.

''யோசித்து நல்ல முடிவாய் சொல்லுங்கோ,''

''நீங்கள் சொன்னதுகள் எல்லாம் எனக்கு ஞாபகம். நான் எதற்கும் பின்னேரம் வந்து சொல்லுறன்'' என்றுள் தங்கலட்சுமி.

★

பொன்னம்பலம் பெரியசங்கடத்தில் ஆழ்ந்துபோனுர். கந்தமூர்த்தியின் செத்த வீட்டுச் செலவை தானே செலவழித்து வசந்தமலரிடம் ஒரு நல்ல பெயரை... தனி இடத்தைப் பெற்றுவிடவேண்டும என அவர் விரும்பினுர்.

அதனுல்தான்தானுகவிரும்பி பொன்னுத்துரை மாஸ்டரிடம் காசைகொடுத்து செத்த வீட்டுச் செலவைப்பார்க்க சொன்னுர். அந்தவிடயம் அவர்மனைவிக்கு தெரிந்ததும் அவள் செத்தவீட்டுச் செலவுக்காக கொடுத்த காசை என்னைக் கேளாமல் ஏன் கொடுத்தீர்கள் என்பதற்கும்எப்படிஅதை அறவிடுவது என்பதற்கும கச்சன்டை பிடித்தாள். பிறகு காசினை அறவாக்குவதற்கு ஒரு வழியினையும் சொல்லிக் கொடுத்தாள்.

அதை நிறைவேற்றுவதற்கு பொன்னம்பலத்திற்கு விருப்பம் இருக்கவில்லை ஆனுல் மனைவி புவனசுந்தரிக்கு பயத்தில் அதனை நிறைவேற்றுமல் விடுவதற்குத் துணிவில்லாமல் இருந்தது.

இன்றைக்கு புவனசுந்தரி பொன்னம்பலத்தைக் கூப்பிட்டாள். வாருங்கோ வசந்தமலர் வீட்டுக்குப்போய் வருவோம். இன்றைக்குவிட்டால் பிறகு பிரச்னை என்றுள்.

பொன்னம்பலமும் புவனசுந்தரியும் வசந்தமலர் வீட்டிற்குள் போனபோது பொன்னுத்துரை மாஸ்டரும் வசந்தமலர் வீட்டில் இருந்தார்,

பொன்னம்பலம் மிகுந்த சங்கடத்துடன் வசந்தமலர் வீட்டினுள் புகுந்தார். பின்னுல் புவனசுந்தரி ஆவேசத்துடன் வந்தாள்.

[வளரும்)

## அற்புத தத்துவம்

ராகம்;- ரஞ்ஜனி — தாளம்:- ஆதி

பல்லவி

வேடிக்கை தனைப்பாரடி — நீர்வையின்
வேலவன் பண்டார வேடம் தாங்கியே செல்லும்

அனுபல்லவி

நாடிமாம்பழம் பெற நானிலம் வலம் வந்தான்
ஆடிஅசைந்து கனி ஆனைமுகனும் பெற்றுன்

சரணம்

அன்னை பிதாவே முன்னறி தெய்வம்
அவர்களே உலகம் அற்புத தத்துவம்
கன்னல் கனியான சந்தன் பழம் நீயான
காட்சி காட்டும் தெய்வ மாட்சி நிறைந்த அந்த

''கவிமாமணி''

★ நீர்வைக்கந்தனுக்கு இன்று மாம்பழத் திருவிழா

## புதிய புத்தகம்

### நூல் : சைவநற்சிந்தனை

ஆசிரியர்;- 'கோப்பாய்சிவம்' ப. சிவானந்தசர்மா, வெளியீடு,- திருநெறிக்கழகம் கிளிநொச்சி.

விலை:- 4 ரூபா.

இலங்கை வானெலியில் சைவ நற்சிந்தனை நிகழ்ச்சியில் ஒலிபரப்பான பத்துக் கட்டுரைகளின் தொகுப்பே இந் நூலாகும்.

பாமர ஜனங்களும் மாணவர்களும் புரிந்து கொள்ளக் கூடிய இலகு நடையில் சில முக்கியமான அடிப்படைச் சமய உண்மைகளையும் அநுட்டான முறைகளையும் இச் சிந்தனை மூலம் சொல்ல முயற்சித்திருக்கின்றேன், என்று இந் நூலாசிரியர் முகவுரையில் குறிப்பிட்டிருப்பதற்கு இணங்க இந்நூலிலுள்ள கட்டுரைகள் சைவசமய உண்மைகள் சிலவற்றை இலகு தமிழிற் தெளிவாக்கிக் கூறுகின்றன.

'பக்தியோடும் இசையோடும் கூடிய பாடல்கள் வெகு சுலபமாக ஆண்டவனை நமக்கருகே அழைத்துவிடும். நமக்கெல்லாய் பற்றுக்கோடான ஸ்கந்தனின் பாதங்களை நாம் இறுகப்பற்றிக் கொண்டோமானுல் ஏனைய பற்றுக்கள் இயல்பாகவே நம்மை விட்டு விலகிவிடுகின்றன. பாடல் வேறு நாம் வேறு என்றில்லாமல்; பாடலோடு, பாட்டின் பொருளோடு பாடலின் பண்ணோடு பாடவேண்டும், என்பன போலக் கட்டுரைகளில் ஆங்காங்கே வரும் வாக்கியங்கள் சிந்தனைக்கு விருந்தளிக்கும் பொருள் வலிமையுடையனவாய் விளங்குகின்றன.

சைவ சமயிகள் சைவசமய உண்மைகளை அறியவும் ஆராயவும் தூண்டும் வகையில் அமைந்துள்ள இந்த நூலை வெளியிட்ட திருநெறிக் கழகமும் நூலை எழுதி உதவிய ப. சிவானந்த சர்மா அவர்களும் நல்லதொரு சைவ சேவை செய்திருக்கின்றனர். பாராட்டப் படவேண்டியவர்கள்.

தி. பொன்னம்பலவாணர்

## டானியல்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும்தொடர்ந்து எழுத்தாளர்களிடமிருந்தும், தோழர்களிடமிருந்தும் அஞ்சலிச் செய்திக வந்த வண்ணமுள்ளன. இறுதி நிகழ்ச்சிகள் வீடியோஎடுக்கப்பட்டு அவரது உறவினர்க்கு அனுப்புவதற்கு தயாராக உள்ளது.

## படிப்பதற்குச் சிறந்த இடம்

கண்டது கற்கப் பண்டிதனுவான் என்ற பழமொழியில் அதிக நம்பிக்கை உடையவர் ஜி. டி. நாயுடு. சிறு வயது முதற்கொண்டே கையில் கிடைக்கும் எல்லாப் புத்தகங்களையும் படித்துவிடுவார். ஆனுல் படிப்பதற்கு நேரம் தான் கிடைக்காது. படிக்க வேண்டிய புத்தகங்கள் நிறையச் சேர்ந்துவிட்டால் அவர் என்ன செய்வார் தெரியுமா?

கோவையில் இருந்து சென்னைக்குச் செல்லும் ரயில் வண்டியில், ஒரு முதல் வகுப்பு பெட்டி முழுவதையும் ரிசர்வ் செய்து கொள்வார். அதில் புத்தக மூடையுடன் ஏறி உட்கார்ந்து கொண்டு படிக்க ஆரம்பிப்பார். ரயில் சென்னைக்கும் கோவைக்குமாக ஓடிக் கொண்டிருக்கும், ஜி டி. நாயுடு மட்டும் பெட்டியிலிருந்து படித்து கொண்டிருப்பார். எல்லாப் புத்தகங்களையும் படித்து முடித்தால்தான் கீழே இறங்குவார். இப்படி நான்கு நாட்கள்வரை ரயிலிலேயே இருந்திருக்கிறுர்.

ஆதாரம் — 'கல்கி'

தொகுப்பு — க. கனகராசா.

## அமைதி தேடும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்மையான, நிலையான சமாதான வாழ்வை வழங்க வந்தயேசு தமது உயிர்ப்பின் ஆவியைத் தம்சீடருக்குள் ஊதுகிறுர். சீடர் மன்னிப்போர் கூட்டமாகவும் அவர்கள் வளர்க்கும் மன்னிப்பு என்ற செடியின் கனிகளே சமாதானம் எனவும் பணிக்கிறுர்.

ஒருவர் ஒருவரது தவறுகளை மன்னித்துக் குறைகளைக் கடந்து உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து மனித மாண்புகளை மதித்து உருவாக்கப்படும் உறவில் மலர்வதுதான் சமாதானம் என்ற உள்ள உணர்வு.

இனங்கள் சமூகங்களுக்கிடையில் நிலவிவரும் குழம்பிய நிலைக்குக் காரணம் உறவின் அத்திவாரமாக விளங்கும் விசுவாசத்தில் தளர்வே ஆகும்.

'விசுவாசம் அற்றவனுயிராதே, விசுவாசம் கொள்' என யேசு தோமையாருக்கு உரைப்பது போல உயிருள்ள தெய்வத்தினை வழி நடத்துதலில் விசுவாசம் கொண்டு தெய்வச் சாயலாக நடமாடும் என் உடன்பிறப்பில் அன்பு கொண்டு அச்சத்தையும், சந்தேகங்களையும் ஒழித்து நம்பி வாழும்போது உறவுகள் ஆழப்படுத்தப்படுகின்றன. உண்மைச் சமாதானம், உண்மை அமைதி உருவாகும். உயிர்த்த யேசுவைக் கண்ட சீடர்களைப் போல் எம் உள்ளங்களும் மகிழ்வால் நிறையும்.

சுவாமி ஜீவா போல்.
அ. ம. தி.

அராலி வடக்கில்

# ரூ. 3 லட்சம் பெறுமதியான நகை, பொருள்கள் கொள்ளை!

(அராலி)

அராலி வடக்கு செட்டியார் மடம் என்ற இடத்திலுள்ள வீடொன்றில் சுமார் 3 லட்சம் ரூபாய் பெறுமதியான பவுண் நகைகளும் பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18-ம் திகதி இரவு 9 மணியளவில் இக்கொள்ளை நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

கந்தையா இராசதுரை என்பவர் வீட்டுக்குள் பின்கதவை உடைத்துக்கொண்டு உட்குந்துள்ள ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டி இராசதுரையின் மனைவியையும் 4 பெண் பிள்ளைகளையும் ஆயுத முனையில் நிறுத்திவிட்டுக் கொள்ளையில் ஈடுபட்டனராம். வெளியில் சென்றிருந்த இராசதுரை திரும்பிவந்தபோது அவரும் ஆயுதமுனையில் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களை அவதூறுகப் பேசியதாகவும், கொலை செய்வோம் எனப் பயமுத்தியதாகவும் கூறப்படுகின்றது. 50 பவுண் எடையுள்ள நகைகள், ஒளி பரப்புக் கருவி, டெக், வானொலிப்பெட்டி, கைக்கடிகாரம், உடுபிடவைகள், ஆயிரம் ருபா ரொக்கம், வெளிநாடு செல்வதற்காக ஆயத்தமாக வைத்திருந்த பாஸ்போர்ட் போன்றவையும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

# "உண்மையான தொண்டனை இழந்துவிட்டோம்"

(மண்டைதீவு)

" உண்மையான சமூக சேவையாளர்களை மதிப்பதும் பாராட்டுவதும்தான் உண்மையான சமூகசேவைக்கு நாம் ஆற்றும் பெரும்பங்காகும். நல்லசேவையாளரைப் கௌரவிப்பதும் அவர்களது தொண்டுள்ளத்தைப் போற்றுவதும் ஒருசிறந்த சேவையாகக் கருத முடியும். இதன் மூலம் நல்ல சமூகத் தொண்டர்களையும் நல்ல சமூக சேவையாளர்களையும் நாம் மக்கள் மத்தியில் மேன்மேலும் உருவாக்க முடியும்"

சமாதான நீதவான் திரு. இ. கந்தையாவின் மறைவு குறித்து மண்டைதீவு வள்ளுவன் சனசமூக நிலையத்தினர் நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மண்டைதீவு கிராம சேவை அலுவலர் திரு எஸ் சுந்தரராஜன் தெரிவித்தார்.

மேற்படி சனசமூக நிலையத்தில் சமாதான நீதிவான் திரு த. சிவசிதம்பரசோதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வள்ளுவன் சனசமூக நிலையத்தின் உப தலைவர் திரு. ஆ கந்தசாமி அஞ்சலிஉரைநிகழ்த்துகையில் இந்தக் கிராமம் ஒரு உன்னதமான தொண்டனை இழந்து விட்டது எமது நிலையம் இன்று அதன் தந்தையை இழந்து பரிதவிக்கிறது என்றூர் அஞ்சலியின்போது நிலையக் கொடி அரைக்கம்பத்தில் இறக்கப்பட்டு கொடிவணக்கம் செலுத்தப்பட்டது,

இதைத்தொடர்ந்து விஷேட சேவை அலுவலர் திரு கே. சிவகுலசிங்கம், ஆசிரியர் திரு. போ. கீதபொன்கலன், முன்னுள் தபாலதிபர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, மண்டைதீவு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. தில்லைநாதன்உட்பட பலர் உரை நிகழ்த்திஞர்கள்.

# வைத்திய நிபுணர்கள்இன்றி நோயாளர் அவதி

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை, மனநோய் வைத்திய நிபுணர்கள் இல்லாமையால் நோயாளர்சள் பெரும்பாதிப்பு அடைந்துவருகின்றனர்.

பருத்தித்துறை.உடுப்பிட்டி, கோப்பாய், சாவகச்சேரித் தொகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான நோயாளர்கள் இவ்வைத்தியசாலைக்கு வருகின்றபோது இவ்வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மனநோய் வைத்திய நிபுணர்கள் இல்லாமையினுல் நீண்டதூரங்களிலிருந்து நோயாளிகள் பலத்த கஷ்டங்களும் சொல்லொணுத் துயரங்களும் அனுபவித்துவருகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளிகளின் பாதிப்பை நீக்கி உதவுமுகமாக இவ்வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரொருவரையும், மனநோய் வைத்திய நிபுணரொருவரையும் அனுப்பிவைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு என். கனகசபையிடம் அவசரமாகக் கேட்டுள்ளது.

## அடுத்தடுத்து

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணுசலம் மாணிக்கவாசகர்

தோற்றம்: 15-08-1920


மறைவு: 20-04-1985

அன்புடன் நினைவு கூரும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. C 1846

## 15-வது ஆண்டு நினைவஞ்சலி



பி. சீமாம்பிள்ளை
(புகையிரத நிலைய அதிபர்)

மலர்வு: 11-05-1904

மறைவு: 21-04-1971

பாசமிகு குடும்பத்தலைவனுக நல்வழிகாட்டியாக அமைந்து செய்வம்போல் எவ்வித குறையுமின்றி எம்மைக்காத்து கடமையில் வெற்றி கண்டீர். அவனியில் அனுதினமும் உம்மை மறப்போமோ?

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

60, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
C 1864


குறித்த நேரத்தில்—குறைந்த செலவில்
உங்களுக்குத் தேவையான

★ "போட்டோஸ்ரட்" பிரதிகள்
★ "ரூேனியோ" பிரதிகள்
★ தமிழ், ஆங்கில "ரைப்பிங்" வேலைகளை

செய்துகொள்ள!

'கிளீன் கட்' KLEEN KHUT,

இல: 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[C 1856) தொலைபேசி எண்: 28823.

யாழ். நகரில்

தரமான போட்டோஸ்ரற் பிரதிக்கு

ஞானம்ஸ் ஸ்ரூடியோ,

301, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

[C 1847] தொலைபேசி: 23067.

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா

மற்றும் சில நாடுகளுக்கு எமது அநுபவம்வாய்ந்த முகவர் உங்களை அழைத்துச் செல்வார். அத்துடன், அவசர பாஸ்போட், பாஸ்போட், BOND, ரிக்கட் . மிகவிரைவாக செய்துகொள்ள

ரஜீவன் ட்ரவல்ஸ்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
B. M. C. முன்பு. T.P. 23665

(C 1849)

உருக்கமான வேண்டுகோள்

கடந்த வெள்ளிக்கிழமை 11-04-1986 ஆம் திகதி இரவு அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையிலுள்ள றேயோ கிளாஸ் தொழிற்சாலையிலும் முருகன் தொழிற்சாலையிலும் ரூபா 20 லட்சம் பெறுமதியான பாரிய இயந்திரங்களும், மின்சார உபகரணங்களும், தளபாடங்களும் இனந்தெரியாத நபர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

இந்த இரண்டு தொழிற்சாலைகளையும் விரைவில் இயங்கவைப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம். கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்குமுன் 200க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கு வேலைசெய்துவந்தது குறிப்பிடத்தக்கது. கொள்ளையிடப்பட்ட பொருள்களை திரும்பப் பெறுவதற்கு உதவுமாறு புனிதமான இயக்கங்களுக்கு பணிவாக வேண்டுகின்றேம்.

[C 1860] இயக்குநர்.

வாடகை அடிப்படையில் வாகனம் தேவை

சுமார் 20 பிள்ளைகளை கொண்டு செல்லக் கூடியதும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை சேவையில் ஈடுபடக் கூடியதுமான வான் ஒன்று வாடகை அடிப்படையில் தேவை. சேவையின் போது சாரதிக்கு 1200/- சம்பளமும், எரிபொருளும், சிறு திருத்தச் செலவும் கொடுக்கப்படும். விபரங்கள் அறிய தொடர்பு கொள்ளுங்கள்:

ரொப்பலர் இன்ரநஷனல்

95, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

A 452

தேவை

எமது அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றக்கூடிய பகுதிநேர பயிண்டர் [BINDER] தேவை.

பயிண்டிங் தொழிலில் நன்கு தேர்ச்சியும் முன்னனுபவமுமுள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை 25-04-1986 ஆம் திகதிக்குமுன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பத்தின் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பயிண்டர்' எனக் குறிப்பிடவும்.

முகவரி:

நிர்வாகி,
'ஈழநாடு' லிமிட்டெட்,
தபால் பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம்.

[A 595]

A/L போட்டிப் பரீட்சை

21-4-86 திங்கள் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின்றது

| | | | |
|---|---|---|---|
| 21-4-86 | மு. ப. 9.00 — 12.00 | இரசாயனம் | II |
| | பி. ப. 1.00 — 3.00 | இரசாயனம் | I |
| 22-4-86 | மு. ப. 9.00 — 12 00 | பௌதிகம் | II |
| | பி. ப. 1.00 — 3.00 | பௌதிகம் | I |

பரீட்சை நடைபெறும் நிலையங்கள்:

| | |
|---|---|
| POLY | தெல்லிப்பளை |
| BOND | சித்தங்கேணி |
| BECON | உடுப்பிட்டி |
| GLASGOW | நெல்லியடி |
| GUGAN | இடைக்காடு |
| SCIENCE ACADEMY | அச்சுவேலி |

யாழ். வைத்தீஸ்வரா பாடசாலை நிலையமாக வழங்கப்பட்ட சகல பரீட்சார்த்திகளும் பின்வரும் நிலையங்களில் பரீட்சைக்கு தோற்றலாம்,

| | |
|---|---|
| SCIENCE ACADEMY | (B.M C.க்கு முன்) |
| NEW MASTER | (B. M. C. லேன்) |
| UNIVERSAL | (KANTHARMADAM) |

(A 453)

# BRITE SOAP WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2.25

கைதேர்ந்த தொழிலாளர்களால்,
விஞ்ஞான முறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY

★ ★ ★ ★

பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்

[A 239]


## இன்று

மாதம்: சித்திரை
திகதி: 7(1986-04-20)
கிழமை: ஞாயிறு
திதி: ஏகாதசி பி. இ. வரை
நக்ஷத்திரம்: மகம் பி.ப. வரை

# இவ்வாரம் எப்படி?

### மேடம்

பெரியவர்களின் பாராட்டுக்கும், பிதாவழிப் பெருமைக்கும் இடமுண்டு. நல்ல சந்தர்ப்பங்கள் ஒரு சிலரின் தீய எண்ணங்களால் தட்டிக்கழிக்கப்படும். பெண்கள் விடயத்தில் நல்ல பயன் கிடைக்கும். விரோத ரேகைபடரும். பெரியோரின் ஆலோசனைப்படி நடக்கவும்.

### இடபம்

இவ்வாரம் தொழில் விடயத்தில் சமசுகம் உண்டு. பொருள் விடயத்தில் நல்ல லாபமும் கிடைப்பதுடன் உயர்சசிகளும் உணடு. பிதா வழியால் தனலாபம் உண்டு. பிரயாணத்தின்போது பொருள் கைநழுவக்கூடும். நித்திரையைக் குறைத்துக் கொள்ளவும்.

### மிதுனம்

அமைதிக்குப்பங்கம் ஏற்படும். உடல் நிலையில் கவனம் வேண்டும். அடுத்துக்கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். பொருள் வந்து சேரும். பொறுப்புகள் உயரும். கடன் சேரும. இடமாற்றங்களும் உண்டு. குடும்பத்தில் குதூகலம் பொங்கும்.

### கடகம்

தெய்வநம்பிக்கை மேலோங்கும். உற்சாகம் தாய்வழி நலன் கிட்டும். பொறுமையின் நிழல் தொடரும் செய்யும். உதவிகள் உபத்திரவத்தை உருவாக்கும் அரசபயம் அருகில் உண்டு. குடும்பத்தில் புயல் வீசி ஓயும் புன்னகை புத்துணர்வைக் கொடுக்கும்.

### சிங்கம்

நிச்சயமற்ற நிலையில் வேதனை. உணவில் அதிக கவனம் செலுத்தவும். அவப்பெயருக்கும் சிறிய ஆயுத பீடைகளும் இடமேற்படலாம். பொருள் வாய்ப்பு ஏற்படும். வெளியிடச் செய்திகள் கிடைக்கலாம்.

### கன்னி

உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும், வியாபாரிகள், பேச்சாளர்கள் போற்றப்படுவர். குழந்தையின் உடல் நலம் குன்றலாம். கயவர்கள் காலை வாரலாம். உறவினர்களே தூற்றுவர்.

### துலாம்

சகோதரர் விஷயத்தில் பொறுமையாக இருக்கவும். பிரிவுகளைத் தவிர்க்கவும் வணிகத்துறையில் வாய்ப்புக்கள் கிடைக்கும் சொத்து விஷயத்தில் நல்ல முடிவு ஏற்படும். பகை தேடிவரும்.

### விருச்சிகம்

உடல் நிலையைப் பேணவும். குடும்பத்தில் ஆதரவுண்டு. பணம் பறிபோகலாம். பிரயாணத்தை பின் போடவும். புதுமனை விஷயங்கள் மேலோங்கும். ஆத்திரத்தை அடக்கவும்.

### தனுசு

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புத்திரர் பாராட்டுக் கிட்டும் லாபகரமான முதலீடு செய்வதற்கு இடமுண்டு. வாகன உரிமையாளர்க்கு வருமானவிருத்தியுண்டு சூழ்ச்சிகளில் அகப்படாதீர்கள்.

### மகரம்

தாய் வழி மகிழ்ச்சியுண்டு. நண்பர்களும் பகைப்பர். எதிலும் விழிப்புணர்ச்சி அவசியம். மக்கள் சிறப்புண்டு. வாகனப்பிரச்னைகள் நிவர்த்தியாகும்.

### கும்பம்

குடும்பத்தில் மகிழ்ச்சியின் சம்பவங்கள் இடம் பெறலாம். நீண்டநாள் திட்டம் ஈடேறும். நண்பரும் துன்பம் தரலாம். வீண்வம்புகளில் தலையிடாமல் அமைதியுடன் நடக்கவும். புத்திரரால் உதவியுண்டு.

### மீனம்

தெய்வ சிந்தனையுடனிருக்கவும். தொட்டதற்கெல்லாம் திட்டுக்கேட்கவேண்டியிருக்கும். காதலர்களுக்குக்கனிவான வாரம். களஸ்திரப் பெருமைக்கும் இடமுண்டு. தொழில் விஷயத்தில் விழிப்புடனிருக்கவும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்


# LANKA CEMENT LIMITED

## KANKESANTHURAI.

### முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் யாழ். மாவட்டத்தினுள் தேடி எடுத்து லங்கா சீமெந்து லிமிட்டெட்டுக்கு விநியோகித்தல்

எமது விரிவான ஆய்வின் பயனாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முருங்கன் களிமண்ணுக்குச் சமமான களிமண் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே மேற்படி களிமண்ணை எமக்கு விநியோகிக்க ஆர்வமுள்ள ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்டவாறு எம்மைத் தொடர்பு கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

1. ஒப்பந்தக்காரர்கள் தங்கள் களிமண் எடுக்கும் பிரதேசத்தினைக் காட்டும் ஒரு சாதாரண வரைபடம் (LOCATION DRAWING) ஒன்றை அமைத்து கீழ்க்காணும் கேள்விப்பத்திரத்துடன் அனுப்பவேண்டும்.
2. வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசத்தில் எடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் பெயர், சுய விலாசமிட்டு எடுக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 குறித்து அரக்கு முத்திரையிட்டு 25-04-1986 காலை 10-30 மணிக்கு முன் கேள்விப்பத்திரத்துடன் 'உதவிப் பொதுமுகாமையாளர்' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.
3. ஒப்பந்தக்காரர்கள் வெவ்வேறு எத்தனை பிரதேசங்களிலும் இருந்து களிமண்ணை விநியோகிக்கலாம் ஆனல் களிமண் எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதேசத்தினதும் சாதாரண வரைபடத்துடன் (LOCATION DRAWING) ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிலோ நிறையுடைய 3 களிமண் மாதிரிகள் ஒவ்வோர் பிரதேசத்தில் இருந்தும் பெறப்பட்டு மேற்குறிப்பிட்டபடி பிரதேசத்தின் பெயர், ஒப்பந்தகாரரின் பெயர், சுய விலாசம், கேள்விப்பத்திர இலக்கம் என்பன எழுதப்பட்டு கேள்விப்பத்திர முடிவு நாளாகிய 25-4-86 காலை 10-30 மணிக்கு முன் எமது உதவிப் பொதுமுகாமையாளர்காரியாலயத்தில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. (I) மேற்படி களிமண்ணை எடுக்கப்படும் பிரதேசத்தில் விநியோகிப்பதற்கான 1 தொன்னுக்கான விலைக்கூறு.
   (II) மேற்படி களிமண்ணை அப்பிரதேசத்திலிருந்து ஏற்றி எமது தொழிற்சாலைக்கு கொண்டுவந்து எமது களிமண்சாலையில் இறக்குதல் மதான் ஒன்றுக்கான விலைக்கூறு.
   (III) நாள் ஒன்றுக்கு விநியோகிக்கக்கூடிய மிகக்குறைந்த தொகை களிமண் தொன்னில் மேற்படி விலைக்கூறுகளை தங்களால் தயாரிக்கப்பட்ட 2 பிரதிகள் கொண்ட படிவங்களில் தயாரித்து அரக்கு முத்திரை இடப்பட்ட 9''X4'' அளவு கொண்ட உறையில் இட்டு

"உதவிப் பொதுமுகாமையாளர்",
லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை

என்ற விலாசமிட்டு உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்விப்பத்திர இலக்கமான LCL/SU/T/01/86 எழுதி 25-04-1986 காலை 10-30 மணிச்கு முன் உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பிக்கவும் மேற்படி கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திர முடிவு நேரமாகிய 10-30 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும்.

மேற்படி விடயமாக மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் விநியோக அதிகாரியை அவரது காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் சந்திக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்,
## லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

09-04-1986. (A 432)



# பிரயாண ஒழுங்குகள்

**கனடா, டென்மார்க், ஜெர்மனி**

முதலிய நாடுகளுக்கு எமது முகவர் உடனடியாக உங்களை அழைத்துச் செல்வார்.

அத்துடன்

**சவூதி அரேபியா, குவைத், டுபாய்**

ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலார்க்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.


(கிளினேர்ஸ், டிறைவர்)

பாஸ்போட், விஸா, பொண்ட், ரிக்கற் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

விலாசம்;

**யூனிவேஷல் ஏஜென்சி**
No; 125 (455) ஸ்ரான்லி வீதி,
(பெற்றோலியம் கூட்டுத்தாபன முன்பாக)
யாழ்ப்பாணம். (C 1829)





சகலவகையான ஓடுவகைகளுக்கும், சீமெந்து கிறில்கற்கள், சீமெந்து, செங்கற்கள், கம்பிக்கட்டைகள், பூச்சாடிகள், கண்டாவளை மணல், சல்லிக்கற்கள். மட்பாண்ட கூட்டுஸ்தாபன உற்பத்திப்பொருள்கள் அனைத்தையும் நாமே விற்பனை செய்கிறோம்.

ஒப்பந்தகாரர்களுக்கு
விசேட கழிவு கொடுக்கப்படும்.

## பாதுகாதேவி ஸ்ரோர்ஸ்,
ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். [A 601]

அருள்மிகு ?காளியம்பாள் தேவஸ்தானத்தினால் 18-04-86 அன்று குலுக்கப்பட்ட சித்திரத் தேர் திருப்பணி அதிர்ஷ்ட லாபச் சீட்டில் பரிசு பெறும் இலக்கங்கள்:

1-ம் பரிசு 726
2-ம் பரிசு 1425
3-ம் பரிசு 1492
4-ம் பரிசு 166
5-ம் பரிசு 666

10 ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள் முறையே:- 429, 1856, 214, 537, 910, 849, 1222, 2279, 348, 2426.

பரிசுப் பொருட்களை 15-5-86 க்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளவும். அதன்பின்னர் தேவஸ்தானத்திற்கு உரிமையாக்கப்படும்.

தேவஸ்தானம்,
சன்னதிட டி.
[C 1878]

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

NATIONAL 20'' T.V Color AKAI வீடியோ டெக் விற்பனைக்குண்டு. தொடர்பு: S T L. வீடியோ கிளப், திருநெல்வேலி. [C 1873]

### தவறிவிட்டது

620801399 X இலக்கமுடைய சுப்பிரமணியம் சுவர்ணனந்தன் என்பவருடைய அடையாள அட்டை K.K.S. வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சு. சுவர்ணனந்தன், மாக்கற் லேன், சுன்னாகம். [C 1876]

முருகேசு தியாகராசா, பலுகாடு மேற்கு, காரைநகர் என்பவருடைய அடையாள அட்டை 18-4-86 அன்று அநுராதபுரத்தில் இருந்து வ.பி.போ.சபை பஸ்ஸில் யாழ்ப்பாணம் வரும்பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். [C 1871]


**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-45, 9-15
பானுச்சந்தர் - சில்க்
**இரத்தக்காட்டேரி**

**எம்பயர் 'B' சினிமா**
அர்ஜுன் - அனிதா
**இளஞ்சிங்கம்**

**லிடோ Jaffna**
10-30, 2-30, 6-30
சிவாஜி, உஷாநந்தினி
சாரதா, எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
**என்னைப்போல் ஒருவன்**
(கலர்)

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## தொழிற்சங்க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தினம் அமைவதால் இதனை முக்கியத்துவப்படுத்தி மே தின விழாவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 25 தொழிற் சங்கங்கள் வெகுஜன அமைப்புகள் இணைந்து இந்த மே தினத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (க)

## யாழ்ப்பாணத்தில்

யாழ். சிவன் கோவிலில் ஆரம்பமாகும் மேதின ஊர்வலம் பின் சிவன் கோவில் வீதியை வத்தடைந்து அங்கு மேதினக்கூட்டத்தைநடத்துவதென்று நேற்று அண்ணா தி. மு. க. மற்றும் 15 அமைப்பு கூட்டுக்குழு தீர்மானித்துள்ளது.

நகர அண்ணா தி. மு. க. செயலகத்தில் நேற்று மாலை கூட்டுக்குழு தலைவர் திரு. ஏ. துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில், சகல தொழிலாளர்களும் இந்த மேதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும், பங்குபற்றுமாறு அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர் பொன். மதிமுகராசா கேட்டுக்கொண்டார்.

யாழ். சிவன் கோவில் வீதியிலிருந்தும் மேதினத்தன்று பிற்பகல் ஆரம்பமாகும் ஊர்வலம் முஸ்லிம் வீதிகள் ஊடாக ஓட்டுமடம் சந்திக்குச்சென்று, சிவப்பிரகாசம் வீதிவழியாக காங்கேசன் வீதிக்குச் சென்று சிவன் கோவில் வீதியை வந்தடைந்து அங்கு மேதினக் கூட்டத்தை நடத்துவதென்றும் நேற்று முடிவுசெய்யப்பட்டது. (க)

## கூட்டுறவு வைத்தியசாலை மூளாய்

## ஏல விற்பனை

பாவனைக்கு உதவாத இரும்பு, பித்தளை, தளபாடப் பொருட்கள் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளவில் 20-04-86 காலை 9-00 மணியளவில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விலைப்பட்ட பொருட்கள் உடனடியாகப் பணம் செலுத்திப் பற்றுச்சீட்டுடன் வைத்தியசாலை வளவிலிருந்து அகற்றப்படவேண்டும்.

சோ. க. வேலாயுதர்,
கௌரவ செயலாளர்.
மூளாய்
சுழிபுரம் 08-04-86.
[A 604]

## முதல் வருட நினைவஞ்சலி



**திரு. சின்னத்தம்பி பஞ்சநாதன் அவர்கள்**

[மினிபஸ் சாரதி
பஸ் இல:- J.E.N 9417
பஞ்சவர்ணக்கிளி
29 ஸ்ரீ 4583]

தோற்றம்: 10-01-1945
மறைவு: 15-4-1985

அன்பின்பிறப்பிடமாய் வாழ்ந்து ஓர் கலங்கரைத் தீபமாய் ஒளி காட்டி நின்று அன்பு பண்பு- பாசமதை நிலை நிறுத்தி வாழ்ந்திட்ட எமது குடும்பத் தலைவனே! சீரிய தகைமை சால் குணக்குன்றே! தக்க பண்பின் தனியுருவே! நீவிர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாயினும்: எமது இதய சிம்மாசனமதில் உமது நினைவுகள் பசுமையாய் நிலைபெற்றுநின்றுஎதிர்கால வாழ்வுக்கு நிலையான வழி காட்டிடுமே!

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா நித்திய சாந்தி அடைந்திடப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், மற்றும்
உற்றார், உறவினர்கள்
நண்பர்கள்.

இல 25, காரைக்காட்டு வீதி,
வண்ணை. வடமேற்கு,
யாழ்ப்பாணம்.
(C1870)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தவமணிதேவி தியாகராஜா**

ஆண்டவன் படைப்பு:
15-06-1943
ஆண்டவன் அழைப்பு:
22-03-1986

எங்கள் இல்லத்தில் 21-4-86 நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் தொடர்ந்து மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அன்புக்கணவர்,
பிள்ளைகள்.

சு. தியாகராஜா,
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (C1872)


## வீடியோ புளொசம்ஸ்

உங்கள் இல்லங்களில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்ச்சியையும் சிறந்தமுறையில் வீடியோ படம் பிடித்து மகிழ நாடுங்கள்:

வீடியோ படம் பிடிப்பதில் இந்தியாவிலும் கொழும்பிலும் பிரசித்தி பெற்றவர்கள்:

**வீடியோ புளொசம்ஸ்**

எமது புதிய வெளியீடுகள்:

1. வல்லில் விஜயா (தரமான பிரதி)
கே. ஆர். விஜயா
2. இரத்தக் காட்டேரி (தரமான பிரதி)
சில்க், பானுசந்தர்
3. கடைக்கண் பார்வை
பாண்டியன், இளவரசி, சத்யராஜ்

| | |
|---|---|
| **வீடியோ புளொசம்ஸ்,**<br>3ப, சிவப்பிரகாசம் வீதி,<br>யாழ்ப்பாணம். | **வீடியோ புளொசம்ஸ்,**<br>ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி.<br>(அற்லஸ் இன்ஸ்ரிரியூட் அருகில்) |

(CA 1881)


## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி

**பர்னந்து பிரான்சிஸ்**
மலர்வு:
12-1-1953

**யூலியானா கிறேஸ்**
மலர்வு:
19-6-1958

ஒற்றுமையுடன் உதிர்வு:
21-3-1986



திருமணமாகி இருமாதங்க ளாகவில்லை
தினவெடுத்த கொலைவெறியர் கண்களிலே
இருவருமாய் அகப்பட்டு மரணத்திலும்
இணைந்து இரணைப்பாலையூர் நினைத்தீர்.

பிரான்சீஸ் கிறேஸ் தம்பதியரே
பிரிந்துனீர் இன்றுடன் ஓர்மாதம்
இராதவும் நினைவுகளை நெஞ்சங்களில்
என்றென்றும் கொண்டுநாம் வாழ்கின்றோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,

| | |
|---|---|
| தந்தை, தாய் | தந்தை தாய் |
| சகோதர - சகோதரிகள் | சகோதர - சகோதரிகள் |
| உறவினர்கள், | அண்ணன், அண்ணி, பிள்ளைகள், |
| நண்பர்கள். | உறவினர்கள். |

இங்ஙனம்,

| | | |
|---|---|---|
| உயரப்புலம், | சிவபாதம் தம்பதிகள் | இரணைப்பாலை, |
| ஆனைக்கோட்டை. | நயினை. | முல்லைத்தீவு. |

(C 1875)


கொழும்பில் சகல வசதிகளுடன் தங்குவதற்கு அறைகள் நாட்கணக்கில் நியாய வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

# ஹோட்டல் சீவம்ஸ்,

19, சங்கமித்தை மாவத்தை,

**கொழும்பு - 13.**

தொலைபேசி : 26522

C 1877

# பூநகரி மகாவித்தியாலய கட்டிடம் தீக்கிரை!

## மாணவர் பத்திரங்கள் சேதம்!!

[யாழ்ப்பாணம்]

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி மகாவித்தியாலய அலுவலகத்துக்கு விஷமிகள் தீ வைத்ததால் அலுவலகத்துக்குள்ளிருந்த சகல தஸ்தாவேஜுகளும் எரிந்து சாம்பராயின

பாடசாலை மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், மாணவர்கள் விடுகைப்பத்திரங்கள், பரீட்சைச் சான்றிதழ்கள், விலைமதிப்புள்ள உபகரணங்கள், மற்றும் தினவரவுப் புத்தகங்கள் தஸ்தாவேஜுகள் தீக்கிரையானவற்றுள் அடங்கும்.

கடந்த 17-ம் திகதி இந்த நாசகாரசம்பவம் இடம்பெற்றது.

இம்மகாவித்தியாலயம் பரந்தன் கல்வி வட்டாரத்தில் கொத்தணி தலைமைப் பாடசாலையாக விளங்குகின்றது. 38 ஆசிரியர்கள் இங்கு கடமையாற்றுகிறார்கள்.

வித்தியாலய அலுவலகத்துக்கு வைக்கப்பட்ட தீ, மற்றும் கட்டிடங்களுக்கும் பரவிக்கொண்டிருக்கையில் அயலவர்களால் மிகுந்த சிரமத்தின் பின்னர் தீ அணைக்கப்பட்டது

காட்டுமிராண்டித்தனமான இத்தீயசெயலையிட்டு பாடசாலை அபிவிருத்திச் சபையும், பெற்றோர்களும் பெரும் கவலை அடைந்துள்ளதுடன் பலத்த கண்டனமும் தெரிவித்துள்ளனர். இதுசம்பந்தமாக கல்வி உயர் அதிகாரிகளுக்கும், புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு சுமார் 100 யார் தூரத்தில் ஆயுதப் படையினரின் முகாம் அமைந்துள்ளது. [பூநகரி நி.மா]

### ஊர்காவல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்ளை, கொலை, கற்பழிப்பு, வழிப்பறி தீ வைப்பு போன்ற குற்றச்சாட்டுகளும் பல ஊர்காவல்படையினர் மீதுசுமத்தப்பட்டுள்ளன. இது குறித்து அரசாங்கத்தினுல ஒழுங்கு நடவடிக்கையுடன் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன காரணமாகவும் அவர்களில் பலர் உற்சாகமிழந்துள்ளனர்.

அறுவடை, மற்றும் பயிர்ச் செய்கைப் பருவங்களும் கிழக்கு, வன்னிப் பகுதிகளில் தற்போது ஆரம்பமாகியுள்ளதால், ஊர்காவல் படையினலுள்ள அநேகமான விவசாயிகள், மேற்குறிப்பிட்ட விவசாய வேலைகளிலேயே முழுமையாக ஈடுபடிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஊர்காவல் படையினரிடம் எதிர்பார்த்தளவு ஒத்துழைப்புக் கிடைப்பது மிகுந்த சிரமமாகவே இருப்பதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன [மா-கி]

### ஆயுர்வேத டாக்டர் கடத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

ஆயுர்வேத டாக்டர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் கடத்திச்செல்லப்பட்டார்.

மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த டாக்டர் எம். நடராசா என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார். [மா]

### சாவகச்சேரி ரயில் நிலையத்தில் கொள்ளை!

(கொழும்பு)

இனந்தெரியாத ஆயுதக் கோஷ்டியினர் சுமார் 2,000 இணைப்புத் தகடுகளை சாவகச்சேரிப் புகையிரத நிலையத்திலிருந்து கொள்ளையடித்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

### நால்வர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''போராளிகளை ஆயுதப் படையினருக்குக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு இது தான் தண்டனை'' என்ற வாசகம் எழுதப்பட்ட கடிதமும் இச் சடலங்களுக்கருகாமையில் இருக்கக் காணப்பட்டது.

மரணமானவர்களில் ராஜலட்சுமி, சரோஜாதேவி, கனகசுந்தரம் ஆகிய மூவரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. [ய-மா]

### இடமாற்றம்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு, திருமதி ஒ. இமானுவல் கம்மடுவ, திரு. எஸ் தங்கராசா இரத்தினபுரி, திருமதி எஸ் கண்மணி இரத்தினபுரி. திரு. கே. கயரோகணர் ஹொறவப்பொத்தானை, திரு. கே கார்த்திகேசு பதுளை, திருமதி கே அப்புத்துரை பதுளை, செல்வி என் சந்திரமலர் பதுளை, திரு கே ஆரியதாஸ் பதுளை, திருமதி எஸ் இராமனுதன்பிள்ளை ஹற்றன், திரு சி. கணபதிப்பிள்ளை அப்கொட், திரு கே இராசேந்திரன் பொஹவந்தலாவ, திருமதி ஜி கணபதிப்பிள்ளை அப்கொட், திருமதி பி சபாரட்ணம் நுவரெலியா, திரு ரி. சிவசுப்பிரமணியம் பொஹவந்தலாவ. செல்வி கே. நாகேஸ்வரி பத்தனை, ஜே விஸ்வநாதபிள்ளை தலவாக்கொல்லை, திருமதி ஏ சுப்பிரமணியம் ஹற்றன், திரு. ஆர் தர்மகுலசிங்கம் முருங்கன், செல்வி எஸ். பத்மசாந்தி மன்னார், திருமதி பி. துரைராசா மன்னார், சகோதரி மேரி ஹரிசிஸ்ரா-மடு திரு. கே. ஆர் டேவிட் திருமலை, திரு கே. பரமநாதன் மூதூர், திருமதி எஸ் தேவராசா திருமலை, திருமதி எஸ். சோமசுந்தரம் குச்சவெளி, திருமதி சி ஏகாம்பரம் திருமலை, திருமதி எஸ். சண்முகம திருமலை, கே விஜயகுமார் திருமலை, திருமதி சி. ஐயாத்துரை வெள்ளாவெளி, திரு. ஆர். செல்லத்துரை காத்தான்குடி, திரு. ரி. ஜெயபாலன் மொறக்கட்டாஞ்சேனை, திருமதி ஜி தம்பிப்பிள்ளை வாழைச்சேனை, திருமதி எஸ் கந்தசாமி எழுதுமட்டுவாள், திரு. வி, சண்முகராசா கிளிநொச்சி, திருமதி என் செல்வரத்தினம் கிளிநொச்சி, ஜனுப் பாருக் விநாயகபுரம். திருமதி ரி. சுநதரமூர்த்தி முல்லைத்தீவு, திருமதி பி. மகாதேவன் ஒட்டுசுட்டான் திரு. கே தணிகாசலம் முள்ளியவளை, திரு எஸ் யோகரா மன்குளம், திரு. கே. பத்மநாதன் முல்லைத்தீவு, திருமதி ஆர். சிவஞானநாதன் முள்ளியவளை,

[தொடரும்]


## உருக்கமான வேண்டுகோள்

இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்கள் எனது வீட்டிற்குள் புகுந்து, என்னையும் எனது குடும்பத்தினரையும், மூன்று மணித்தியாலங்கள் அறையொன்றுள் இருக்கவிட்டு காவலுக்கு இளைஞர் ஒருவர் நிற்க, என்னிடமிருந்த பணம், எனது குடும்பத்தினர் அணிந்திருந்த அத்தனை நகைகளையும், விலையுயர்ந்த அத்தனை பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதனுல், நாங்களும் எனது கிராமமக்களும், சம்பந்தப்பட்ட நபர்கள் மேல் விசனமடைந்துள்ளோம். இதற்கு நீதி வழங்குமாறு சகல மக்களையும் வேண்டுகிறோம்

20-4-86

வி. செல்லத்துரை.
(கருச் செல்லத்துரை)
உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

(C 1867)



## புனித இயக்கங்களுக்கு உருக்கமான வேண்டுகோள்

18-4-86 வெள்ளிக்கிழமை இனந்தெரியாத இளைஞர்கள் எனது வீட்டில் பணம், நகைகள், தொலைக்காட்சிப்பெட்டி ஆகியவற்றைக் கொள்ளையடித்ததுடன், பராயம் அடைந்த எனது நான்கு பெண்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்காக மலேசியா பயணமாவதற்கு உரிய கடவுச்சீட்டு, மலேசிய அடையாள அட்டை, மலேசியா செல்வதற்கான ஒரு வழிப்பயணச் சீட்டு என்பனவற்றையும், கொள்ளை அடித்துச் சென்றுள்ளார்கள் இக்கொள்ளையினுல் எனது பெண்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுஇருள் சூழ்ந்ததாக உள்ளது. எனவே புனித கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் அன்பான இயக்கங்களே! இக்கொள்ளையரைக் கண்டுபிடித்து, எனது பெண்பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக நான் மேற்கொள்ளவிருக்கும் மலேசிய பயணத்திற்கான தஸ்தாவேஜுகளைப் பெற்றுத் தருமாறு மிகவும் மன்றாட்டமாக வேண்டுகின்றேன்.

கந்தையா இராசதுரை

அராலி வடக்கு. [C 1879]


### தென்மராட்சியில் துக்கம்!

[கே. வி. கே. திருலோகமூர்த்தி]

நாவற்குழி இராணுவமுகாம் மீது போராளிகள் கடந்த இரு தினங்களாக நடத்திய தாக்குதலையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடு, ஷெல் தாக்குதல் முதலானவற்றிற்கு இலக்காகிப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகத் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டு கறுப்புக்கொடி எங்கும் பறக்க விடப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தில் பலியாகிய இரு இளைஞர்களின் சடலங்கள் பூரண மரியாதைகளுடன் சாவகச்சேரியில் அடக்கம்செய்யப்பட்டன.

### இன்று கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வர்த்தக சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று காலை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

### 6 பேர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புஅருணகிரிவீதியில் நேற்றுமாலை ரோந்து சென்ற அதிரடிப் பொலிஸார் 6 போரைக் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவத்தின் போது துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றது. [மா]

### வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப் பகுதியில் இரு சமூகத்தவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பு இறுதியில் வாள் வெட்டில் முடிவடைந்தது. வாள்வெட்டுக்கு இலக்கான நால்வர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ


## மரண அறிவித்தல்

### திரு. வி. செ. நடராசா

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த முன்னாள் எவர்சில்வர் மாளிகை உரிமையாளரும், இரும்புப்பெட்டி விற்பனையாளருமாகிய வி செ. நடராசா அவர்கள் 19-4-86 அன்று சிவபதமடைந்து விட்டார். ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோட்டை பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(C 1882) நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

### திரு. நாகலிங்கம இளையதம்பி

சுன்னாகம் திருமகள் அச்சக முன்னைநாள் மிசின் போர்மனும், சுன்னாகம் கொத்தியவத்தையச் சேர்ந்தவருமான திரு. நாகலிங்கம் இளையதம்பி காலமாகிவிட்டார் இவர் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும், சண்முகநாதன் (பிரபல வர்த்தகர், சுன்னாகம்) சரோஜினிதேவி, அம்பிகைபாகன் ரஜனி ரான்ஸ்போர்ட்), மகாதேவன், மங்களம்மா, தம்பிமுத்து சிவம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராணி, குலசேகரம்பிள்ளை, பத்மாவதி, சுசிந்திராதேவி, மகாலிங்கம் ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (ஞாயிறு) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். (C1883]

### ஸ்ரீமதி விசாலாட்சிஅம்மை கனகரத்தினம்

நீர்வேலி, ஸ்ரீமதி விசாலாட்சிஅம்மை கனகரத்தினம் 18 4 86 வெள்ளிக்கிழமை இரவு ஆரூரன் திருவடிக்காளானார் அன்னார் நீர்வேலி, அமரர் க.வே. கனகரத்தினம், J P, அவர்களின் தர்ம பத்தினியும், கந்தர்மடம் உமாபதி கந்தசாமி, திருமதி கந்தசாமி ஆகியோரின் அன்புமைத்துணியும், கருணாகரன், திருமதி கருணாகரன், கிருபாகரன், திருமதி கிருபாகரன், ஞானகரன், திருமதி ஞானகரன் ஆகியோரின் அருமை மாமியும், ரமணன், முகுந்தன், காந்தன், கௌரி சங்கர், உமையாள், தேவகி, காயத்திரி, தயாபரி ஆகியோரின் ஆசைப் பாட்டியுமாவார். அன்னாரின் பூதவுடல் 19 4. 86 சனிக்கிழமை மாலை நீர்வேலி பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உ.க.கிருபாகரன்,
உரிமையாளர்,
ஹரன் ஜுவலர்ஸ்.

(C 1880)

### தம்பு கந்தையா

(தரணியகல பிரபல வர்த்தகர்]

புங்குடுதீவு 6 ம் வட்டாரத்தில் வசிப்பவரும் தரணியகல ஸ்ரீ முருகன் ஸ்ரோர் உரிமையாளருமான தம்பு கந்தையா காலமானார். இவர் காலஞ் சென்ற பரமனுச்சியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, புவனேஸ்வரி பரமேஸ்வரன் (லட்சுமி விலாஸ், யாழ்ப்பாணம்), விக்கினேஸ்வரன் (லட்சுமி விலாஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையாரும், க. செ. தம்பிப்பிள்ளை, ராஜசுலோசனு ஆகியோரின் மாமனாரும், காலஞ் சென்ற பராசக்தி, நாகம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற வே.ஆ. குழந்தைவேலு, மரகதம், ஆகியோரின் மைத்துனரும், பொ மகாதேவனின் பெரிய தந்தையும், பத்மராஜா, தமிழ்விழி, பத்மருபன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (20-6-86) இன்று ஞாயிறு காலை 10 மணியளவில் கேரதீவு மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

தகவல்: பிள்ளைகள்.

புங்குடுதீவு. (C- 1865)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone. 22389, 24120